

சங்கரன்
வளவை வளவன்

தி. சொரமணி
19.12.89.

# சங்கரன்

வளவை வளவன்



மீரா வெளியீடு

38, வேம்படி வீதி,

யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| Title | ⊙ | Sangaran |
| Subiect | ⊙ | A Contemporary Novel |
| Author | ⊙ | Valavai Valavan |
| Language | ⊙ | Thamizh |
| Publication | ⊙ | November 1989 |
| Edition | ⊙ | First |
| Price | ⊙ | Rs. 20/- |
| Copyright | ⊙ | (C) T. M. Chellathamby<br>Manthuvil-Kodikamam |
| Paper Used | ⊙ | News Print - Sri Lanka |
| Size | ⊙ | 17.5 Cm × 12.5 Cm Crown |
| Type Points | ⊙ | 10 Pt |
| Page | ⊙ | 71 + 10 |
| Cover | ⊙ | Thaya / Colombo Studio<br>Puthiya Chithira Pathipakam |
| Publisher | ⊙ | David Ligory, Meera Veliyeedu<br>38, Vembady Rd. Jaffna |
| Printer | ⊙ | Puthiya Chithira Pathipakam |

# என்னுரை

ஆற்றல் மிக்கது இலக்கியம். போற்றுவதும் தூற்றுவதும் அவரவர் அளவுகோலைப் பொறுத்ததே அன்றி ஆக்கத்தின் அளவைப் பொறுத்ததன்று.

மனிதாய வாதிகள் சிலர் முழு மனிதகுலத்தையும் செழுமைப்படுத்த தமது சிந்தனைகளை முன்வைத்துச் சென்றுள்ளனர். மனித குலத்தின் ஜீவாமிர்தமாகப்பரிணமித்துள்ள அத்தகைய சிந்தனைகளைப் பட்டை தீட்டி அதன் ஒளியை மக்கள் மனங்களில் பாய்ச்சியவர்கள் எழுத்தாளர்களே. இத்தகு எழுத்தாளர்களதும் – மனிதாயவாதிகளினதும் வாழ்க்கை வறுமைத்தீயால் தாக்குண்டு, ஏக்கம் நிறைந்ததாக உள்ளதை நாம்பார்க்கவும் அறியவும் முடிகின்றது.

நம் நாட்டு எழுத்தாளர்கள் எழுத்தினைத் தொழிலாகக் கொள்ளாத போதிலும், மனிதாயம்மிக்க எழுத்தாளர் சிலரின் மோசமான வறுமை நிலை என்னுள்ளத்தில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தி இருந்தது.

இத்தகைய தாக்கத்தின் பகைப்புலங்களை இந்தச் சமூகம் புரிந்து கொண்டதா?

சமுதாயக் கொடுமைகளால் ஒரு மனிதன் எப்படி மாற்றப்படுகின்றான்?

இந்த மாற்றத்திற்கான காரணர்கள் யார்?

வீதி ஓரத்தில் ஒரு சமூகத்தைப் படைத்து வைத்திருக்கும் இந்தச் சமூகம் அந்தச் சமூகத்தின் மீது அநுதாபப்படுவதும், காறி உமிழ்வதோடும் திருப்தி அடைந்து விடுவது நியாயப்படுத்தப்படக் கூடியதா?

இத்தகைய ஏக்கங்களின் தாக்கமும் என் மனதைக் குடைந்து குடைந்து, சமூகச்சகதிக்குள் போராடும் ஒரு எழுத்தாளனையும் அவனது அவஸ்தைகளையும். அவலங்களையும், வீதியோரத்திற்கு விரட்டப்பட்ட ஒரு மனிதனின் அவலங்களோடும் இணைத்து ஒரு குறுநாவல் எழுதவேண்டும் என்ற முடிவை நியாயப்படுத்தியது.

இன வாதப்பீடை எமக்கு மட்டுமே என இன்னும் எண்ணிக்கொண்டிருக்கும் நம் தமிழர்கள் மத்தியில் வட்டத்துள் வட்டமாகத் துடித்துக் கொண்டிருக்கும் இன்னொரு தமிழனை, இன்னும் இச்சமூகத்தில் பலர் ஏற்றுக் கொள்ளவில்லையே என்ற ஆதங்கத்தோடு-

இந்த நாட்டின் முழு மக்களுக்காகவும் உழைத்துழைத்து ஓடாகிப் போனதமிழன் ஒருவன் வீதியில் இரந்துண்ணும் பிச்சைக் காரனுக மாற்றப்பட்டு, இரந்திரந்து மனி தனுகக்கூட மதிக்கப்படாது சமூகத்தின் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்ட ஒரு சமூக நிலையிலிருந்து சமூகப்பிரச்னைகளை உள் வாங்கி சமூகநீரோட்டத்தோடு சென்று அழிந்து விடாது, மனித விழுமியங்களுக் கான போராட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டு ஒரு மனிதனுன ஒருவனை உங்கள் முன் விடுத்துள்ளேன்.

அவன் தான் சங்கரன்.

இதுவே எனது முதல் குறுநாவல். இக்குறு நாவலில்; மரத்துப் போன மானுட உணர்வு களை தன் மனிதாய நேயத்தால் உணர வைத்து, மனிதனுகவாழ்ந்து, ஆதிக்க, மேலாதிக்க உணர்வுகளால் அவனும் தாக் கப்பட்டவனே என்ற நியாயபூர்வமான நிலையை முழுமையாக்கித்தந்துள்ளேன்.

எனது இந்த நியாயபூர்வமான முடிவிற்கு களம் சமைத்துத்தந்தவர்கள் ஈழநாடு ஸ்தாபனத்தினரும் யாழ். இலக்கிய வட் டத்தினருமே. 1984 ம் ஆண்டிற்கான ரசிக மணியின் நினைவுக் குறுநாவல் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்றமையே இக் குறு நாவலுக்கான அங்கீகாரமென்று கருது கின்றேன்.

''படைப்பிலக்கியம் என்பது சொற்களாகிய கலையே'' என்ருர் கான்ஸ்டான்டின் ஃபெடின் நாவல் இலக்கியப் பரப்பில் சங்கரனின்

தேடல் சிலருக்கு ஒரு கேள்விக்குறியாகவும் படக்கூடும்.

அவர்களுக்காக அலட்டிக் கொள்ள வேண்டியது நானல்ல. இக்குறுநாவல் ஓரளவிற்காவது உங்களைச் சிந்திக்கத் தூண்டினால் அதுவே எனக்குப் போதுமானதும் எனது வெற்றியுமாகும்.

என்னைச் செழுமைப் படுத்துவதற்காக ஆரோக்கியமான விமர்சனங்களை. வரவேற்கின்றேன். எதிர்பார்க்கின்றேன்.

இக்குறுநாவல் உருவாகக் காரணமானவர்களுக்கும் நூலுருவில் வெளியிட்ட மீரா வெளியீட்டாளர் நண்பர் டேவிற்லிகோரி அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்ட புதிய சித்திரா பதிப்பகத்தார்க்கும்,

பல சிரமங்களுக்கு மத்தியிலும், இந்நாவலுக்கான முன்னுரையை துரிதகதியில் தந்து உதவிய கலாநிதி — சோ. கிருஷ்ணராசா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**வளவை வளவன்**

**மந்துவில்,**
**கொடிகாமம்.**

# முன்னுரை

அனுதையான சங்கரன் ஒரு பெரியவரின் அரவணைப்பி னுல் எழுத்தாளனுகி, நாவல் பரிசுப்போட்டியில் பங்கு பெறுவதற்காக கொழும்பு செல்கிருன். அங்கு இனக் கலவரத்தில் அகப்பட்டு கப்பலில் திரும்புவதான செய் தியை இக்குறுநாவல் தெரிவிக்கிறது. இனக்கலவரத்தை கருப்பொருளாகக்கொண்டு பல நாவல்கள் வெளிவந் துள்ளன. வளவை வளவனும் தனது பாணியில் அதே கருத்தைக்கொண்ட ஒரு நாவலேத் தந்துள்ளார்.

கதையமைப்பில் ஒரு குறுநாவல் வடிவத்தில் இது தரப் பட்டாலும், மிகப்பரந்ததொரு களத்திற் செயற்படுவதால் நாவலின் கட்டமைப்பில் பல பிரச்சனைகளே நூலாசிரி யர் எதிர்நோக்குகிருர். இதனுற்போலும் கதைசொல்லும் பாங்கு இந்நாவலில் மேலோங்கியுள்ளது போல் தெரி கின்றது.

நாவலமைப்பில் நிகழ்ச்சித்தொகுப்பு நாவலின் நிகழ் காலம், கருத்துநிலே வெளிப்பாடு என்பன பாத்திரசார் புடன் எழிமையாக இணைதல் வேண்டும். இதற்கு மீண்

டும் மீண்டும் செப்பனிடும் முயற்சி இன்றியமையாதது. ஆக்க இலக்கியங்கள் அதிகம், குறிப்பாக சிறுகதைகளும், நாவல்களும் சுவைஞருக்கு ஏதோவொரு செய்தியைச் சொல்லவே விரும்புகின்றன. சுவைஞரின் கவனத்தைத் தன்பால் ஈர்ப்பதற்கு செய்திகள் சொல்வதற்கான உகந்த உத்திகள் கையாளப்படுவது அவசியம். கதைசொல்லும் முறையினுல் வாசகனைக் கவருதல் வேண்டும்.

வளவை வளவன் நீண்டகாலமாக ஆக்கவிலக்கியத்துறையில் ஈடுபட்டு பல பரிசுகளையும் பெற்றுள்ளார். ''சங்கரன்'' இவரது முதலாவது நாவல். இது இலக்கியவட்டத்தினரின் பாராட்டுப்பரிசையும் பெற்றிருக்கிறது. இப்படைப்பு மூலம் வளவை வளவன் தன்னை நாவலாசிரியனுக சுவைஞருக்கு அறிமுகப்படுத்துகிருர்.

சோ. கிருஸ்ணராஜா

மெய்யியல் துறைத்தலைவர்
மெய்யியற்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பதிப்புரை

பிரியமுள்ள வாசகர்களுக்கு !

வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ள எழுத்தாளர்களின் ஆக்கங்களை தொடர்ந்து வெளியிடும். வாய்ப்புகளும், வசதிகளும், நாவல்களும் இருந்தும்.

நம் நாட்டில் குடத்துக்குள் விளக்காக இருக்கும் புதிய புதிய எழுத்தாளர்களையும் இலக்கியக் களத்திற்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் "சங்கரன்" என்னும் இந்நூலின் மூலம் "வளவை வளன்" என்ற எழுத்தாளரை அறிமுகப்படுத்துகிறோம்.

இந் நூலாசிரியர் பல சிறுகதைகளையும், கவிதைகளையும், குறுங்கதைகளையும், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். 1984ம் ஆண்டு "ஈழநாடு" நடாத்திய கனகசெந்திநாதன் குறுநாவல் போட்டிக்கு "சங்கரன்" என்னும் முதல் குறு நாவலையும் 1987ம் ஆண்டு "யாழ் இலக்கிய. வட்டம்" நடாத்திய குறுநாவல் போட்டிக்கு "பேசாத கோபுரங்கள்" என்னும் குறுநாவலையும் 86ம் ஆண்டு கந்தோலிக்க இலக்கிய வட்டமும் நான் சஞ்சிகையும் நடாத்திய போட்டியில் மரத்துப் போன மானுடம் (முதற்பரிசு பெற்றது) என்ற குறுநாவலையும் 1989ம் ஆண்டு வீரகேசரி நடாத்திய குறுநாவல் போட்டிக்கு "நிதர்சனங்களும் முரண்பாடுகளும்" என்னும் குறுநாவலையும் எழுதியுள்ளார்.

இருந்தும் இவரது ஆக்கங்கள் நூலுருப்பெருததால் இலக்கியவாதி என்ற மட்டத்தில் சரியாக ஆராயப்பட வில்லை என்பது எம் அபிப்பிராயம், இவரது படைப்புக்கள் இன்னும் நூல்வடிவம் பெருத காரணத்தால் விமர்சன ரீதியில் அணுகப்படவில்லை. "சங்கரன்" என்னும் இந்நாவலில்யதார்த்தமான ஏக்கமும் ஆவேசமும் நிறைந்திருக்கின்றது. இந்நாவல் அவரை ஓரளவு பரிசீலனைக்கு — விமர்சனத்திற்கு உட்படுத்தும் என்பது எம் எண்ணம்.

"மீரா வெளியீட்டில்" இன்னும் பல புதிய எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்து அறிமுகம் செய்து, ஆற்றலுள்ள எவரையும் இலக்கியம் படைக்கத் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்பதுதான் வெளியீட்டின் எமது நோக்கம்.

இந்த நிலையில் "மீரா வெளியீடு" இனி பின் வாங்க முடியாது எனப் பிரபல எழுத்தாளர்கள் கூட எதிர்பார்க்கின்றார்கள்.

வாசகர்களாகிய நீங்களும் புதிய எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கும் ஆதரவு வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம்.

அன்புடன்,

டி. லிகோரி

மீரா வெளியீடு
38, வேம்படி வீதி
யாழ்ப்பாணம்
01-01-1989

தபாற்காரன் கொடுத்துவிட்டுப்போன அந்தக் கடிதத்தைச் சங்கரன் அவசர அவசரமாகப் பிரித்தான். பிரித்த மாத்திரத்தில் அவனது முகம் பௌர்ணமி நிலவாகிப்பிரவகித்தது. திரும்பத் திரும்பச் சங்கரன் அந்தக்கடிதத்தைப் படித்தான். எத்தனைமுறை திருப்பித் திருப்பித் படித்தாலும் மனம் சலிப்பதாக இல்லை சங்கரனுக்கு. ''உங்கள் அத்திவாரம் அழுகின்றது'' நாவல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. பரிசினை நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும். டவர் மண்டபத்தில் இருபத்துமூன்றும் திகதி பகல் 2.30 மணிக்குப் பரிசளிப்புவிழா நடைபெறும். கோடிட்டுக் கிடந்த அந்த வரிகளில்தான் சங்கரனின் கண்கள் ஊர்ந்து மிதந்து கொண்டிருந்தன. யாரும் தன்னைக் கவனிப்பதற்கில்லை என்றதால் தன்னை மறந்து ஒருகணம் ஆடினான். பிரசவ வேதனையால் துடித்துத் துவண்ட பெண்ணொருத்தி பிள்ளை சுகப்பிரசவமானதும் அடைந்த இன்பத்திலும் மேலானது அவனது இன்பம். எனது நாவலுக்கு இரண்டாம் பரிசு...சே .. அவகாசம் இன்னும் அதிகமாகக்

கிடைத்திருந்தால் முதற்பரிசைத் தட்டிக் கொண்டிருக்கலாம் என்று ஒருகணம் அவனது மனம் ஏங்கியது. அந்த ஏக்கத் திலும் ஓ.. என்னே பேதமை என் முதல் நாவல் இது தானே. இதற்கு இரண்டாம் பரிசு கிடைத்ததே பெரிது தானே... என்று தன்னைத் தானே சமாதானப்படுத்தவும் அவன் தயங்கவில்லை.

இந்தச் சந்தோஷமான சேதியைப் பகிர்ந்து கொள்ள அவன் கூத்தனைத் தேடினான். கூத்தன் இன்னமும் வந்து சேரவில்லை கூத்தன் எப்போது வருவார் என்ற நினைப்பில் தன் பணிகளைக்கூட மறந்து திளைத்துக் கொண்டிருந்தான் சங்கரன். இந்தப் பரிசிற்குரியவனாகத் தன்னை ஆக்கித்தந்த 'சரம்' சஞ்சிகையின் ஆசிரியர் கூத்தனை தன்மனதுள் மானசீகமாகத் தரிசித்தான். எங்கோ தெருக்கோடியில் கிடந்து குப்பையோடு குப்பையாகப்போய் அழிந்துவிட இருந்தவனை இந்த நிலைக்கு ஆளாக்கிக் கொண்ட கூத்தனை நினைத்த போது சங்கரனின் கண்களில் கண்ணீர் பிரவகித்து ஓடியது. என்னப்பா சங்கரன் ஏன்...ஏன்... என்னதான் இப்ப நடந்து போச்சுது. ஏனிப்படிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறாய் என்றவாறு கூத்தன் உள்ளே வந்து சேர்ந்தார். உருத்திர சன்மனை நினைப்பூட்டிக் கொண்டிருந்த சங்கரன் ஓடிச்சென்று கூத்தனின் கால்களைப் பற்றிக்கொண்டான். ஐயா என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க என்று கேட்பதுபோல அவன்பாவனை இருந்தது. கூத்தன் சங்கரனைக் கைகளால் பற்றி எடுத்து அணைத்துக்கொண்டார். தாயின் அணைப்பில் மகிழும் குழந்தையைப் போல சங்கரன் துவண்டு போனான்.

கையில் கிடந்த அந்தக் கடிதத்தைக் கூத்தனிடம் கொடுத்து விட்டு ஒதுங்கிநின்றான் சங்கரன் தன் ஆசானின் பாராட்டைப் பெறப்போகும் மகிழ்வில் தன்னை மறந்து நின்ற சங்கரனுக்கு அவரது பதில் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. இரண்டாம் பரிசுக்குக் காலில் விழுந்திட்டாய். முதலாம்பரிசு கிடைச்சிருந்தால் எனக்குச் சொல்லாமலே எங்காவது நீயும் போய்த் தொலைஞ்சிருப்பாயோ யார் கண்டது என்று கூறி விட்டு எதையோ தேட முயன்றுகொண்டார்.

மனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட துயரவடுவின் வர்ணங்கள் வார்த்தைகளாகிக் கூத்தனிடமிருந்து வந்து அவனைப் பல மாகத் தாக்கிக்கொண்டது. யாரோ செய்துவிட்ட தவறுக் காக என்னை ஏன்தான் இவர் நொந்துகொள்ள வைக்க வேணும் ஒருவேளை மனோவைப்போல நானும் தன்னை விட்டு விட்டு எங்காவது போய்விடுவேனோ என்று எண்ணிவிட்டார் போலும் என்று சங்கரன் தனக்குள்ளாக எண்ணிக் கொண் டான். மனோ யாருக்கும் சொல்லிக்கொள்ளாமல் சென்று தனித் தொழில் ஒன்றை தொடங்கியதும் தவறுதான். ஆனால் அது அவனிடம் காட்டவேண்டிய வெறுப்பு. அதை என்னி டம் ஏன் காட்டவேணும். எல்லாரிடமும் தங்கள் கோபத் தைக்காட்ட முடியாதவர்கள் தமக்கு வசதியானவர்களிடம் தான் காட்டிக்கொள்வார்களோ? அப்படியானால் நான் மனோவைவிட தைரியமற்றவனா? சங்கரனின் மனம் கடிவா ளம் இழந்த குதிரைபோல எங்கோ தாவிக் குதித்தோடத் தொடங்கியது, மனதைக் கட்டுப்படுத்துவதற்கு முன் சங்க ரனின் கண்கள் குளமாகிப் பன்னீர் தெளித்தன. ஐயா நீங் கள் குப்பை மேட்டில் கிடந்த என்னைப் பண்படுத்தி நல்ல விதைகளை விதைத்து வைத்தீர்கள். இன்று அறுவடையின் போதுமட்டும் ஏனிப்படிக் காய்கிறீகள். உங்களால் வளர்க் கப்பட்ட உடல் பொருள் ஆவி அத்தனையுமே என்றோ உங் களிடம் அடைக்கலமாகி விட்டன. இந்தப் பந்தத்தை எந்த உறவுகளோ ஏற்றத்தாழ்வுகளோ எதுவுமே இனிப்பிரித்து விட முடியாதென்பதை நீங்கள் நம்பினால் அது ஒன்றே எனக் குப் போதும்.

உணர்ச்சி வசப்பட்ட சங்கரனின் வார்த்தைகளைக் கேட்ட கூத்தனின் மனச்சாட்சி அவரை வெகுவாகத் தாக்கிவிட்டது போலும். தன்னையிழந்த ஒருநிலையில் எங்கோ தன் வெறிச் சோடிய பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார், அந் தப்பார்வையின் ஆழத்தைப் புரிந்துகொள்ள முடியாத சங்க ரன் என்னவோ எதுவோ என்று தன்மனதுக்குள் குமைந்து கொண்டிருந்தான்.

நீண்ட நேரம்வரை நிலவிய மௌனத்தைக் கிழித்துக் கொண்டு சங்கரா நாத்தழுதழுக்க கூத்தர் அழைத்தார். அந்த அழைப்பில் கூத்தரின் அத்தனை உணர்ச்சி பாவங்களையும் உணர்ந்து கொள்ள முடிந்தது. சங்கரன் கூத்தரின் முன்னே தாயின்முன் சேயாக அல்ல. கோவிலின்முன் பக்தனாகத் தாவிவந்து நின்றுகொண்டான்.

என் மனக்கோபத்தில் ஏதேதோ எல்லாம் சொல்லிவிட்டேன். அவற்றை மறந்து மன்னித்துவிடு. கூத்தரின் வாய் வார்த்தையை முடிக்குமுன்னரே ''ஐயா என்ன வார்த்தை ஐயா இது. நீங்கள் என்னிடம் இப்படிப் பேசலாமா'' என்று தன் ஆத்ம விசாரத்தைக் காட்டிக்கொண்டான்.

தவறு செய்தவன் யாரிடமானாலும் தன் தவறுக்காக மன்னிப்புக் கேட்கத்தானே வேண்டும். இல்லையென்றால் அவனை அவனது மனச்சாட்சியே வதைத்துக்கொண்டிருக்கும். அந்த வதையிலிருந்து எந்த மனிதனும் தப்புவதென்பது முடியாத செயலாகும். இதில் என்ன உயர்வும் தாழ்வும் இருந்துவிட முடியும். ஒவ்வொரு மனிதனும் மனிதன் என்ற வரையறைக்குள் சமமானவர்களே. அறிவிலும் ஆற்றலிலும் தான் வேறுபட முடியும். அறிவால் உயர்ந்த ஒருவன் தன் தவறினை உணர்ந்துகொள்ளாதவரை அறிவற்ற ஒருவன் உணர்ந்துகொள்ளவில்லையே என்று நாம் அங்கலாய்ப்பதில் அர்த்தமேதுமிருக்க முடியுமா? அதிருக்கட்டும் நீ நாளை இரவு ரெயிலில் போனால்தானே மறுநாள் பரிசளிப்புவிழாவில் கலந்து கொள்ளலாம். எல்லா ஆயுத்தங்களையும் செய்து விட்டுஅப்புறமா இங்குவா என்று சொன்னவர் ஏதோ நினைத்தவராக இந்தா இதில் இருநூறு ரூபாயிருக்கு. கொண்டுபோய் ஆக வேண்டியதைக் கவனி. நான் நேரம் கிடைச்சால் நேரத்திற்கு ஸ்ரேசனுக்கு வாறன்.

சங்கரன் நன்றிப்பெருக்கோடு ரூபாய் நோட்டுக்களைப் பெற்றுக் கொண்டு 'சரம்சஞ்சிகை' நிலையத்தைவிட்டு வெளியேறினான்.

சங்கரன் போய் விட்டான். அவன் போனதிசையையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டுநின்ருர் கூத்தன். கடல் நுரைபோல வெளுத்து விட்ட தலே, முதிர்ச்சியின் சாயல் குடிகொண்டாலும் குன்ருத ஒளியுடைய விழிகள். எடுப்பான நாசி எவரையும் தன்வசப்படுத்திவிடும் குரல் வளம். இத்தனேயும் மொத்தமான உருவம்தான் கூத்தன். யாழ்ப்பாணத்தில் வெளியாகும் குறிப்பிடக்கூடிய சஞ்சிகைகளில் 'சரம்' சஞ்சிகையும் ஒன்று. கடந்த இருபதாண்டு காலமாக கூத்தன் அந்தச்சஞ்சிகையைப் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் தான் நடாத்திக் கொண்டிருந்தார். பல எழுத்தாளர்களேயும் கவிஞர்களேயும் உருவாக்கிய அந்தச் சஞ்சிகைக்கு பத்தாண்டுகளாக உழைத்தவன் சங்கரன். எழுதப் படிக்கத் தெரியாதிருந்த சங்கரன் இன்று நாவல் போட்டியில் பரிசு பெறச் செல்கின்ருன் என்ருல் அந்த இனிய காட்சியைக் காண்பது பேசுவது கேட்பதெல்லாமே அவனே ஆளாக்கிவிட்ட கூத்தனுக்குப் பேரின்பம் தானே. அந்த இன்ப அநுபவத்தை இப்பொ

ழுதே தன் மனக்கண்ணில் கூத்தன் கண்டுகொண்டிருக்கின்ருர் போலும். அந்தக் காட்சிகளின் ரம்மியங்களுக்கிடையிடையே ஓ... அந்தத் துயரமிகு நினைவுகளும் எப்படியோ புகுந்துவிட்டது போலும். நினைவுகளின் நிழலாட்டம் வெண் முகிலோட்டமாய் ஓடிவருகிறது.

இருபத்தைந்து வருடங்களின் முன் இலங்கையின் கறை படிந்த காலமது. ஐம்பத்தெட்டில் நடந்து முடிந்த அந்தக் கோர நாடகத்தில் கூத்தரின் மகள் கஸ்தூரியும் காடையர் களால் குத்திக் குதறப்பட்டுத் துடிதுடித்து மாண்டுபோனுள். 'சிறீ' எதிர்ப்புப் போராட்டத்தின் போதுதான் க'ஸ்தூரியும் கோரமாகக் கொலைசெய்யப்பட்டாள். பெரதெனியா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்காகச் சென்ற கஸ்தூரியின் பிணத்தைக்கூடப் பெற்ருேர்களால் காணமுடியாமல் போய் விட்டது. கஸ்தூரியைப்போல எத்தனை எத்தனையோ பேருக்கு இந்த அவலச்சாவு கிட்டியதென்பதை என்றைக்காவது மறந்துவிடக் கூடியதா? மறக்க முடியாத அந்த நாட்களிலிருந்துதான் கூத்தரின் வாழ்க்கைப்படகு திசையற்றுச் செல்லும் படகாக மாறியது.

நீண்டகாலமாகப் பிள்ளையில்லாமல் இருந்து பெற்ற ஒரே செல்வமகள் கஸ்தூரி. அவளுக்கு இப்படியொரு அவலச் சாவு வந்ததென்ருல் அதைத் தாங்கிக்கொள்ள அந்தப் பெற்ருேர்களுக்கு முடியுமா? எந்த மனிதாபிமானமுள்ள மனிதனும் தாங்கமாட்டாத அந்தக் கொடுமையோடு கூத்தரின் மனைவி கண்ணம்மா சித்தப்பிரமையால் பாதிக்கப்படடுவிட்டாள்.

கஸ்தூரி கஸ்தூரி என்று கத்திப் புலம்புவதும் யாராவது பிள்ளைகளைக் கண்டால் ஓடிச்சென்று கட்டிப்பிடித்து முத்தமிடுவதும் ''செல்லக்கண்ணில்லை என்ரை அன்புக்குஞ்சில்லை வீட்டை வாடா பிள்ளைக்குப் பால்காய்ச்சி வைச்சிருக்கேன்'' என்று தன்பாட்டில் பேசிக்கொள்வதும்தான் கண்ணம்மாவின் செயலாக மாறியிருந்தது. கண்ணம்மாவின் இந்தப் போக

கிலிருந்து அவளை விடுவித்து மீண்டும் ஒரு புதிய கண்ணம் மாவாகக்க் கூத்தன் எடுத்த முயற்சிகள் யாவும் சூனியமாகி விட்டன. கண்ணம்மாவின் முடிவு இனி முடிந்த முடிவாகத் தான் பூற்றுப்பெறப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்ட கூத்தன் விரக்தியின் விளிம்பில் நடைப்பிணமாகத் திரியலானுர்.

அந்தக் காலத்தில் 'சரம்சஞ்சிகை'யின் முழுப்பொறுப்பையும் மனே என்ற மனேகரனே கவனித்துக் கொண்டிருந்தான். ஏதோ காரியாலயம் செல்லவேண்டும் என்று ஏதோ நினைவு வந்துவிட்டால் அந்த வேளையில் மட்டும் சென்று கொள் வார். கூத்தன், சென்ருலும் அவரால் சஞ்சிகை பற்றியோ விசயங்கள் பற்றியோ பேச முடிவதில்லை. ஏதோ வெள்ளிக் கிழமை விருந்தாளிபோலப் பேசுவதும் உடனே திரும்புவது மாகத்தான் இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் முதல்தரமான வியாபாரி என்ருல் என்ன கடைக்கோடி வியாபாரி என்ருலென்ன பிச்சை கேட்பவர்க ளுக்கென்று ஒதுக்கி வைத்திருக்கும் நாள்தான் வெள்ளிக் கிழமை. வாரம் முழுவதும் சேர்த்து வைத்த சதக்காசுகளை ஒவ்வொரு சதமாகப் போட்டுவிட்டு வெள்ளிக்கிழமை விருந் தாளிகள் என்று பட்டமும் சூட்டிவிட்டுத் தாமே இந்த உல கத்தின் பிதாமகர்களெனப் பிதற்றிக்கொள்ளும் பணமுதலை களை சிலேடையாகத் தகர்த்தெறிந்த அந்த வெள்ளிக்கிழமை விருந்தாளிகளின் தரிசனங்களென்ற சிறுகதை கூத்தருக்கு மிகுந்ததொரு மதிப்பீட்டைப் பெற்றுக்கொடுத்தது. அந்த ''வெள்ளிக்கிழமை விருந்தாளிகளின் தரிசனத்தை'' எழுதிய கூத்தன்... இன்று அவர்கூட, சரம் காரியாலயத்திற்கு வெள் ளிக்கிழமை விருந்தாளியாக மாற்றப்பட்டு விட்டார். சிறீ எதிர்ப்புப் போராட்டத்தால் இப்படி ஆக்கப்பட்ட பலரில் கூத்தன் மட்டும் முற்ருக மாற்றப்பட்டு விட்டார். கண்ணம்மா கஸ்தூரியை நினைத்து அழுதழுதே தன்னை அழித்துக்கொண் டிருந்தாள். கூத்தன் கஸ்தூரிக்காகவும் கண்ணம்மாவுக்கா கவும் தன்னை மெல்லமெல்ல இழந்துகொண்டிருந்தான்.

"வேதனைத்தீயுள் வீழ்ந்தவர்கள் மீண்டுகொள்வதேயில்லை" என்பதற்குக் கூத்தனே மிகச்சிறந்த உதாரணமாக ஆகிவிட்டான். கண்ணம்மாவும் கதறிப் புலம்பியே வாழ்ந்துவிட்டுத் தன்வாழ்வை முடித்துக்கொண்டாள்.

பாவம் கூத்தன் நடைப்பிணமாக ஏனோ தானோவென்று வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தார். தற்கொலை செய்துவிடுவதற்கு ஏதும் காரணங்கள் தேவையென்று கருதப்படுமானல் அத்தனை காரணங்களும் கூத்தனுக்கு இருக்கவே செய்தது. ஆனலும் தற்கொலையை எந்தக் காரணத்தாலும் ஏற்றுக்கொள்ளாத ஒருவர். அதனைச் செய்வதென்பது நினைத்துவிடக்கூடியதா என்ன? கயிறறுந்த பட்டமாகிவிட்ட கூத்தனுக்கு சங்கரனின் சந்திப்பு ஏதோ ஒரு ஆறுதலைக் கொடுக்கத்தான் செய்தது. கூத்தனும் சங்கரனும் ஒருவருக்கொருவர் ஆறுதலளிப்பவர்களாகவும் துணையாகவுமே இருந்தனர்.

சங்கரன் கூத்தனின் இக்கட்டான நிலையில் அவரோடு சேர்ந்துகொண்டதுகூடஒரு கதைதான். சங்கரனினதும் கூத்தனினதும் அந்தச் சோகப்படலத்தை நீங்கள் சந்திக்கும்போது அந்த வேதனையில் கண்களுக்கு வேலை கொடுக்கத்தான் போகின்றீர்கள்.

கூத்தரின் சேர்க்கையிலிருந்து சங்கரனை அவரது இலக்கிய வழி பற்றியிழுத்தது. வாழ்க்கை இலக்கியமாகும்போது அந்த இலக்கியத்தின் பாத்திரங்களாக மனிதன் மாறிவிடாதிருப்பதென்பது முடியக்கூடியதா? சங்கரன் அந்த இலக்கிய வழியில் கால்பதித்து நடப்பதற்கு சந்தர்ப்பத்தின் கனிவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். கூத்தரின் மனதில் தனக்கென்று இருந்த ஒரே வாரிசு இறந்து போனதால் தனது பணியைத் தொடர்ந்தும் செய்வதற்கு ஒரு வாரிசை உருவாக்கிவிட வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்திருந்தார். தனது எண்ணத்திற்கு சங்கரன்தான் மிகப்பொருத்தமானவன் என்ற எண்ணம் நாளாக ஆகக் கூத்தரின் மன

தில் ஆழமாக வேர்விட்டுப் படரத் தொடங்கியது. இயல்பாகவே சங்கரனிடம் பொருந்தியிருந்த உழைக்கும் சக்தியும் சோம்பலில்லாத சுதந்திர சுயாதீனப் போக்கும் கூத்தரை வெகுவாகக் கவர்ந்து விட்டது. சங்கரனைத் தானகவே இத்துறையில் நாட்டமுற்று வரச்செய்ய வேண்டுமென்ற குறிக்கோளைத் தன் மனதிலிருந்து வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

ஒருநாள் ஐயா எனக்கு இந்த தினசரிப் பேப்பர் வித்துப் பழக்கமுண்டுங்க. ஆனல் கணக்குப் பண்ணிக்கொள்ள மாட்டேன். நான்தான் படிக்கேல்லையே. அதுக்கென்ன பண்ணுவன் காசிலை கோட்டை விட்டிடுவன். பேப்பர்க்காரன்கள் எனத்குக் கணக்குத் தெரியாது என்று சொல்லிப் பேப்பரையே தராமல் விட்டிட்டாங்க. அதுதான் லீவு நேரங்களிலை எனக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் குடுத்தீங்கன்ன கோடி புண்ணியமுண்டுங்க என்று குமைந்து குமைந்து சங்கரன் சொல்லிவிட்டு கூத்தரின் பதிலையே பார்த்துக்கொண்டிருந்தான். கூத்தரின் பார்வை எதிரேயிருந்த மகாகவி பாரதியின் படத்தில் நிலைகுத்தி நின்றது. சங்கரனின் மனம் நான் என்னவோ கேட்கிறேன் இவரென்ன படத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிருரே என்று அங்கலாய்த்தது. கூத்தர்தம் பார்வையின் அர்த்தம் அவனுக்கு விளங்கியிருக்க நியாயமில்லைத்தானே.

கல்வி சிறந்த தமிழ்நாடென்று பாடிவைத்த பாரதியே கேட்டாயா இந்தக்குரலை. அரிச்சுவடியே தெரியாமல் எத்தனை பேரப்பா இந்த நாட்டில் அவதிப்படுகிருர்கள் என்று பாரதியோடு பேசிக்கொண்ட கூத்தர் சங்கரா உனக்குப் பாடம் சொல்லித் தாறதிலைதாண்டா உண்மையான புண்ணியமே இருக்கு. நீ சொன்னியே கோடிபுண்ணியம்னு அது கோயில் கோயிலாகச் சென்று மடங்களிலை மூட்டை மூட்டையாக அவிச்சுச் சோம்பேறியாக இருக்கும் பலருக்குக் கொடுப்பதுவோ, கோயில்களை எண்ணுக்கணக்கில் கட்டிமுடிப்பதிலோ

இல்லையாம். அதைப்பற்றி இந்தாபார் இந்தப் படத்திலே இருக்கிறவர்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதி. இவன் பாடிஞன்

> **அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்**
> **ஆலயம் பதிஞயிரம் நாட்டல்**
> **அன்னயாவினும் புண்ணியம் கோடி**
> **ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்.**

என்று. சரி சரி உன்னைப்போல எத்தனை ஆயிரம்பேர் இந்த நாட்டின் வீதிகளிலும் சந்தி தெருக்களிலும் குடும்பம் நடத்துருங்க. வாழுருங்க அவங்களின் பிள்ளைகளும் அப்படியே வாழவேண்டியிருக்கு. இந்த நிலமை நீண்டு கொண்டே போகும்போது உன்னைப்போன்றவர்களின் எண்ணிக்கையும் நீளுந்தானே. அந்த எண்ணிக்கையில் ஒன்றைக் குறைத்து விட்டால் அதுபோதுமே நான் பிறந்த பிறவிப்பயன் பெறுவதற்கு. காலையில நீ சமயலை முடித்திட்டு சாப்பாட்டோடு நம்ம காரியாலயத்திற்கு வந்துவிட வேணும் தெரிஞ்சுதோ. அங்கு கணக்கென்ன எல்லாமே படிக்கலாம் என்ருர் கூத்தன்.

ஆகட்டுங்க ஐயா. நான் பத்துமணிக்குள்ள எல்லாம் முடிச்சிட்டு அங்கையே வந்திடுறன். சங்கரனின் மனதில் குடியிருந்த ஆசையின் அளவு அந்த வார்த்தைகளில் நிறைந்திருந்தது.

சரம் சஞ்சிகைக் காரியாலயத்தில் சங்கரன் கல்வி கற்ருன், கலைபயின்ருன். உலகளாவிய பல்துறைகளையும் அவன் அங்கே தான் கற்றுக்கொண்டான்.

இல்லாமை நிறைந்தவர்களென்று இருப்பவர் சொல்வது மட்டுமல்ல பிறர்க்குதவாது தன்னையே விருத்தி செய்து கொண்டு செல்வதால் தானே இல்லாமை வாழ்கிறது இல்லாமை ஒழிவதென்பது இல்லாரெல்லாரும் ஒன்று சேர்வதா

லும் ஏற்படும், இருப்பவர் தம் நல்நினைவுகளாலும் ஏற்படும். ஆனால் இந்த வழிகளைப் பின்பற்றுபவர்கள் இங்கு இல்லாததால் தானே என்னவோ துயர்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இல்லாமையை விரட்ட மேலை நாடுகளில் அறிஞர்களின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துகின்றார்கள். இல்லாமையை விரட்டி அடிக்க அவிர்களால் முடிந்தது. ஆனால் நாமோ இன்னமும் ஊழ்வினையையும் கர்மவினைகளையும் நம்பிக் கண்ணீர் வடிக்கின்றோம். கண்ணீர் வடிப்பர்கள் காலம் முழுவதும் அழுது அழுது எதனையுமே காணாமல் மண்ணோடு மண்ணாகச் சாய்கின்றார்கள். உப்பரிகை வாழ்வில் சுகம் காண்பவர்கள் தம்மை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டு செல்வதற்கு அரசு முதல் ஆலயம் வரை எல்லாவழிகளையும் இணைத்துக் கொள்கின்றார்கள். இந்த இருவேறுபட்ட அமைப்புகள் இருக்கும் வரை இல்லாதவன் இரந்திரந்து இல்லாமலே மாளத்தான் வேண்டும். இருப்பவன் உயர்ந்துயர்ந்து உச்சிவரை செல்லத் தான் நேரும். இந்த நிலைமைகளை விளங்கிக் கொண்டுதான் கவியரசர்கண்ணதாசன்

'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்''

என்றுபாடி இருக்கின்றான் போலும், அப்படி ஒரு நிலைக்கான போராட்டங்கள் தான் இன்று உலகின் மூலைமுடுக்கெல்லாம் நடக்கின்றதென்று அன்றாட உலகச் செய்திகள் முரசறைகின்றதே...... கூத்தரின் சிந்தனை சங்கரனின் கலங்கரை விளக்கமாக மாறியது. சங்கரனின் வாழ்க்கையில் இன்னும என்னென்ன இருக்குமோ அவைகளை எண்ணிக் கூத்தன் கவலைப்படுவதேயில்லை. சங்கரனை கூத்தன் ஓர் படைப்பாளியாக மாற்றியமைத்து விட்டிருந்தார். அந்தக் காலவடுக்கள் திரைப்படம் போலக் கூத்தரின் நெஞ்சக்குகைக்குள் ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஓட்டத்தில் கூத்தர் தன்னை மறந்து விட்டார்.

3

சங்கரன் தனது றூமுக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். நாளையும் நாளை மறுதினமும் அரசாங்க விடுமுறை நாள். கொழும்பிலிருக்கும் இலக்கிய நண்பர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் வசதியில்லாமல் போய்விட்டதே என்ற கவலே. இன்னெருபுறம் பரிசளிப்புவிழாவிற்கேற்ப நல்ல உடுப்பு ஒன்ருவது தன்னிடம் இல்லையே என்ற கவலே. கையில் இருநூறுரூபாய் மட்டும். என்ன செய்வது என்பதைப் புரிந்துகொள்ள முடியாது துடித்துக் கொண்டிருந்தது அவனது உள்ளம். இரவல் உடுப்புகளாவது வாங்கிக் கொள்ளலாம் அதற்கும் நண்பர்களைத் தேடிப்பிடித்தாக வேணுமே. நாளே விடுமுறை நாளென்பதால் எங்கெங்கு செல்கிருர்களோ என்பதுவேறு. ஏதோ பார்ப்போம் என்றவாறு தூக்கத்தை வலிந்திழுப்பவனுகப் படுக்கையில் புரண்டு கொண்டான் சங்கரன், உள்ளம் மகிழ்ச்சியின் நிறைவில் திளேத்திருக்கும்போது மனிதனுக்குத் தூக்கமேவருவதில்லேத்தானே? கொழும்பு மாநகரில் வானே இடிக்கும் உயர் மாடிகளும்

விண்முகிற் கூட்டம் போல அங்குமிங்கும் ஓடித்திரியும் மோட்டார் வண்டிகள் எல்லாம் அவன் மனக்கண்ணில் மாறி மாறி ஓடிக்கொண்டே இருந்தன உடல் மட்டும் யாழ்ப்பாணத்தில் இருந்ததேயொழிய உள்ளம் முழுமையாக கொழும்பு மாநகரில்தான் பவனி வந்து கொண்டிருந்தது. பரிசளிப்பு விழாவிற்குச் சென்று விழாவில் கலந்து கொள்வதற்கு முன்னரே சங்கரன் பரிசளிப்புவிழாவை மானசீகமாக அநுபவித்துக் கொண்டிருந்தான். ஒரு எழுத்தாளனின் இதயம் தனது படைப்புகள் வெளியாகி வரும்போதும் அந்த ஆக்கங்களுக்குப் பரிசு கிடைக்கும் போதும் தான் ஆனந்த சாகரத்துள் மூழ்கிவிடுகிறது. அந்தவகையில சங்கரனும் அந்த இன்பத்துள் மூழ்கிக்கிடந்தான்.

விடிந்த பொழுதிற்கு சாட்டை கொடுத்து அனுப்புவதுபோலச் சங்கரன் சுறுசுறுப்பாகச் செயற்பட்டான். என்றுமில்லாத ஓர் வீறு அவனிடம் இன்றுமட்டும் எங்கிருந்தோ வந்து குடிகொண்டிருக்க வேண்டும். ஓட்டமும் நடையுமாக பஸ் நிலையம் சென்று கொண்டான். அங்கு சென்றபோதுதான் கடைகள் திறக்கமாட்டாதென்ற நினைவுகூட வந்தது. சாந்தி சலவைத்தொழிற்சாலைக்குச் சென்றால் ஒருவேளை அவர்களை வீட்டில் சந்தித்துக் கொள்ளலாம் எனச் சங்கரன நினைத்துக் கொண்டு சாந்தி சலவைத்தொழிற்சாலையை நோக்கி நடக்கத் தொடங்கினான். விடுமுறைநாள் என்பதால் வீதியெங்கும் வெறிச்சோடிக் கிடந்தது ஒருசில தேனீர்ச்சாலைகளும் ஹோட்டல்கள் மட்டுமே திறந்து கிடந்தன. சாந்தி சலவைத் தொழிற்சாலை வரை வந்துவிட்ட சங்கரன் சற்று நிதானித்துக்கொண்டு சாந்தி சலவைத்தொழிற்சாலைக்குப் பக்கமாக இருந்த கேற்றைத் திறந்தான். கேற் திறப்பதற்கும் அங்கு நாதன் வந்து சேரவும் சரியாயிருந்தது. நாதன் இன்று லான்றி திறக்க மாட்டீர்களா? சங்கரன் நாசூக்காகப் பேச்சைத் தொடக்கினான் கூத்தனின் உடுப்புகள் சலவைக்குப் போட்டு வந்ததாலேற்பட்ட நட்புறவு அவனை உரிமை கொண்டாட வைத்தது. எட்டுமணியாகும். ஏன் என்ன காலங்காத்

தாலேயே வந்திட்டியள் சங்கரன் அவசரமோ? நாதனின் கேள்விக்கணே சங்கரனுக்கு வாய்ப்புக் கொடுப்பது போலத் தெரிந்தது.

அப்படியொன்றுமில்லாமல் இத்தனே நேரத்தோடு வருவேனு? நாதன் எனக்கு, அவசரமாக ஒரு உதவி தேவைப்படுகின்றது. செய்யமுடியுமா? சங்கரன் பீடிகையோடு விசயத்திற்கு வந்தான்.

உதவியா? அப்படி என்ன உதவி ஏதோ முடியுமானுல் செய்யத்தானே வேண்டும். என்ன உதவியோ? நாதன் நிறுத்திஞன்.

இல்லே... நான்... இரவு மெயிலில் கொழும்புக்கு அவசரமாகச் செல்லவேண்டியிருக்கிறது. எனக்கு நாவல் போட்டியில் பரிசு கிடைச்சிருக்கு. நாளேக்குப் பரிசளிப்பென்று அறிவித்திருக்காங்கள். அதுதான்... ஒருசோடி உடுப்பு இரவலாக உதவினுல் நல்லது... விக்கி முனகி இழுத்து நிறுத்திஞன் சங்கரன்.

இதென்னப்பா பெரிய விசயமா? இப்படி எத்தனேபேர் வந்து வாங்கிட்டுப் போருங்க. உங்களுக்கு உதவினுல் என்ன குறைஞ்சு போயிடும். இப்படி நாதன் சொன்னபோது சங்கரனுக்கு பால்வார்த்தது போலிருந்தது. நாதன் தனக்கு இப்படி உடுப்புத் தருவதற்குச் சம்மதித்ததே கூத்தரின் செல்வாக்குத்தான் காரணமென்று மனதுள் எண்ணிக்கொண்டான். அந்த நன்றி மறவாத நிலேப்பாடுதான் அவனின் உயர்வுக்குக் காரணமாயிருக்கவும் வேண்டும்.

ஒருசோடி போதுமா என்று கேட்டுக்கொண்டே நாதன் பழைய பத்திரிகை ஒன்றில் உடுப்பை எடுத்து வைத்துச் சுற்றிக்கொண்டான். உடுப்பு வைப்பதும் சுருட்டுவதும் சங்கரனின் கண்களில் தெளிவாகத் தெரிந்தது. கால்ச்சட்டையும் சேட்டும்தான் என்பதைக்கண்டு அவன் மனதுள் ஒரு

வித குமைச்சலும் கூச்சமும் அடைந்தான். அவனுக்கு இந்தக் காற்சட்டை அனுபவமே புதுமைதான். சரிசரி நான் போன அன்றே திரும்பிவிடுவேன். அதுக்குமேலே ஏன்தானென்று நினைத்தவனுக ஒருசோடியே போதும் நாதன். என்னிடமுள்ளதை றெயிலுக்கை போட்டுக்கொள்ளலாம். ஏதோ கொழும்பிலே பரிசளிப்பென்றதாலதான் - எப்படியும் தேசத் தலைவர்கள் இலக்கிய கர்த்தாக்கள் என்று பெரியவர்கள் முன்னிலையில் எப்படியும் ஒரு நல்ல உடுப்போடு போனுல் நன்ருக இருக்குமேயென்றுதான். தனது அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொண்டே உடுப்புப் பார்சலைப் பெற்றுக்கொண்டு நடக்கலானுன்.

இனியன என்றுமே இனியவைதான். நினைக்கும்போதுதான் அது; அதனை அனுபவிக்கும்போது கிடைப்பதைக்காட்டிலும் அதிகமாகக் கிடைத்து விடுகின்றது. அந்த அநுபவ இன்பத்தை நெஞ்சத்தில் தேக்கி அநுபவித்துக்கொண்டே நடந்துகொண்டிருந்தான் சங்கரன். சன நடமாட்டம் குறைவானதால் தன்பாட்டில் சங்கரனின் வாய் ஏதேதோ முணுமுணுக்கக் கால்கள் நடந்துகொண்டிருந்தன.

மனேகரனின் நினைவுகள் சங்கரனை இப்போது இன்பவதைசெய்யத் தொடங்கின. கூத்தனுக்கு அடுத்த குருவாகவும் நண்பனுகவுமிருந்த மனேகரன் மட்டும் இன்று இங்கிருப்பானென்ருல் இந்த உடுப்புக்குக்கூட நான் இங்கு நடக்க வேண்டி ஏற்பட்டிருக்காது. வசதிபடைத்த பலரில் ஒருவனுக மனேகரன் இருந்ததால் அவனிப்போது தனியான நிறுவனமொன்றைத் தலைநகரில் நடாத்திக் கொண்டிருக்கிருன். சங்கரன் சரம் சஞ்சிகையில் வேலைசெய்யத் தொடங்குவதற்குப் பத்து வருடங்கள் முன்பிருந்தே வேலைசெய்தவன். அவனேடு சங்கரன் பழகிய அந்த நாட்கள்... ஓ... அந்த நாட்கள் எத்தனை பசுமையானவை. எழுத்தறிவித்தவன் இறைவன் என்ருல்... படைப்பவன் பிரம்மன் எனருல் - சங்கரா... இலக்கியக்காரர்களும் பிரம்மாக்கள்தான். இலக்கியக்காரனுக்குக்கால ஓட்டம் மிகக் கைதேர்ந்த கலையாகிவிடும். அதனுல்தான்

அவனது படைப்புக்கள் காலத்தால் அழியாது போற்றப்படு கின்றது. மதிப்போடு வாழ்கிறது என்று ஒருமுறை சொல்லி விட்டு சங்கரா உன்பேர் என்னவோ சிவனின் பேர்தான். ஆனால் சர்ம் சஞ்சிகையால் நீ பிரமனாக மாற்றப்பட்டுவிட் டாய் என்பதை மறந்து விடாதேயென்று சங்கரனின் முதற் சிறுகதை பிரசுரமானபோது கூறிச்சிரித்த காட்சி இப்போதும் சங்கரனின் முன்னே மனோகரன் சிரிக்கும் ஒரு பிரமையாகத் தோன்றிக்கொண்டே இருந்தது.

கிறீஸ்ரி என்ற சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு கொழும்பிலேயே தங்கிவிட்டான் மனோகரன். இப் படிச் செய்வானென்று எவருமே நம்பாத போதுதான் அது நடந்தது. மனோ பிறின்ரேர்ஸ் என்று புதிய அச்சகமொன்றை நிறுவி அவன் அங்கேயே தங்கியும் விட்டான். அந்தக் கோலத்தில்தான் சங்கரனுக்குப் பரிசு கிடைத்த செய்தியை சங்கரன் சொன்னபோது கூத்தன், முதலாய பரிசு கிடைச் சிருந்தால் எனக்குச் சொல்லாமலே எங்கேயாவது போயி ருப்பாய் என்ன! என்று சினந்திருக்க வேண்டும். என்னதான் கூத்தன் கோபித்தாலும் அணைத்துக் கொள்வதிலும் ஆதர வளிப்பதிலும் அவரிடம் தாய்மை உணர்வுதான் மிகுந்திருக் குமென்று மனோகரனே கூறியிருந்ததன் உண்மை சங்கர னுக்கு அனுபவித்தபோதுதான தெளிவாகியது.

நடைபாதை வணிகன் போல சங்கரன் தனக்குள் பேசுவதும் சிரிப்பதுமாக தன் றூமுக்கு வந்து சேர்ந்தான். தனக்கான சமையல்களை எல்லாம் செய்துகொண்டு புறப்பட்டால்... கூத் தன் ஐயாவுக்கும் என்கையால் சமைச்சுப்போட்டு வெகுநாட் களாகிப் போச்சு. வீடு வளவுகளை விற்றுக்கொண்டதிலிருந்து அவர் கடைச்சாப்பாடு தானே. இன்றைக்கு என் கையால் சமைச்சுக் குடுத்திட்டுப் போனால்... சங்கரனின் மனம் சந் தோஷச் சிறைக்குள் புகுந்ததால் எதைச் செய்வது எதைத் தவிர்ப்பது என்று தெரியாமல் திண்டாடினான். ரெயில் பய ணங்களின் இன்ப துன்பங்களும் அவற்றோடு தொடர்புபட்ட சம்பவங்களும் சங்கரனின் எண்ணத்தில் மிதந்து வந்தன.

சென்ற வருடத்தில் கொழும்பிலிருந்து ஆடைகிழிந்தும் அங் கமிழந்தும் பாதி உடையோடும் உடல் கீறிக் கிழித்து ரத் தம் தோய்ந்த உடல்களும் உயிரற்ற உடல்களும் வந்து சேர்ந்திருந்தன. அந்தக் கறைபடிந்த ரெயில் பயணத்தை யும் கண்ணீர் நதி பாய்ந்த காலத்தின் வடுக்களையும் கூட அவன் மனம் ஒருமுறை எண்ணிப் பார்த்துக்கொள்ளத்தவற வில்லை. இனப்பூசல்களாலும் கலவரங்களாலும் ஏற்பட்டு விட்ட இழப்புகள், அதனைத் தொடர்ந்து நாட்டின் அமைதி யின்மை இவை மீண்டும் வரக்கூடாது. அப்படியொரு கொடு மையை மனத்தால்கூட நினைத்துப் பார்க்கக்கூடாது என்று அவன் எண்ணிக்கொண்டான். சங்கரனின் எண்ணக்குதிரை எத்தனை மேடுபள்ளங்களை எல்லாம் தாவி ஏறிக் குதித்துக் கொண்டிருந்தது. இன்பத்தை நுகர்வதென்றால் மனிதருக்கு நேரத்தின் ஓட்டம் தெரிவதே இல்லை. ஆனால் துன்பத்தை அனுபவிப்பதென்றால் ஏனோ நேரமே பெருஞ்சுமையாகி வருத்தி விடுகிறது. சங்கரனுக்கு இன்பக் கிறுகிறுப்பு நேரத் தின் ஓட்டத்தை அளவிடாது போகவே சமையல் நேரத்தை இழந்துவிட்ட பரிதவிப்பில் இப்போது முக்குழித்தான். சே... என்ன பேதமை இனிமேல் சமைப்பதென்றால்... நேரம் போதாதே என்று எண்ணிவிட்டு இன்றும் ஏதோ கடையில் இரண்டு பணிஸ் ஒரு பழம் வாங்கிட்டால் இரவுச் சாப்பாட் டைச் சரிக்கட்டிப் போடலாந்தானே என்று அவன் எண் ணியபோது மணி பன்னிரண்டைத் தாண்டிவிட்டது. குளித்து விட்டுக் கடைக்குச் செல்வதற்கே நேரம் போதுமென்ற நினைப்போடு கிணற்றடியை நோக்கிச் சென்றுகொண்டான். சங்கரனின் மனதில், ''மனிதன் துன்பத்திலும் தவறுகின்றான் இன்பத்திலும் தவறுகின்றான், தவறுகளே அற்ற ஒரு நிலைக்கு வருவதற்கு உணர்வுபூர்வமாகச் செயற்படா மைதான் காரணம் என்பதை ஏனோ உணர்ந்து கொள்வ தில்லை.'' என்ற ஆழ்ந்த சிந்தனை ஒன்று கோடிட்டு நின்றது.

சரியாக இரவு ஏழுமணிக்கு யாழ் புகைபிரத நிலையத்திற்கு தபால்வண்டி வந்து சேர்ந்தது. எப்போது ரெயின் வருமென்று காத்திருந்த சனக்கூட்டம் முண்டி அடித்துக் கொண்டும் நெரிபட்டுத் தள்ளுண்டு கொண்டும் ஏறிக் கொண்டது. அவசர சைகையொன்றைக் கண்டு தயாராகும் விமானப்படை வீரர்களின் உசார்நிலை ஒவ்வொரு பிரயாணியிடத்தும் எங்கிருந்து தான் இந்த ரெயின் வந்ததும் வந்து சேர்ந்து விடுகிறதோ. சங்கரனும் ஏனையோரின் அவதியோடு அவதியாக ஏறிக் கிடைத்த இடத்தில் அமர்ந்து கொண்டான். கோணர் சீற்றுகளெல்லாம் கோண்டாவில் ஸ்ரேசனோடு காலியாகிவிடும் என்பதைத் தெரிந்துகொண்ட சங்கரன் தனக்குக் கிடைத்து விட்ட இடத்திலேயே இருந்து கொண்டான். வசதியான இடப்தேடி அங்கலாய்ப்போரின் அமளிகுறைவதாகவில்லை. என்றாலும் அந்த அமளிதுமளியும் அனுபவ இன்பமாகத்தானிருந்தது சங்கரனுக்கு. வண்டி புறப்பட்டுவிட்டபோது சங்கரனின் மனம் வண்டியோடு போட்டியிட்டுக் கொண்டோடி

யது. இதற்குமுன் சரம்சஞ்சிகையின் விடயமாக எத்தனையோ முறை கொழும்பிற்குச் சென்றிருந்தாலும் இம்முறைப் பயணம் இனித்ததுபோல என்றுமே அவன் இனிய பயணத்தை அநுபவிக்கவில்லை.

ஒவ்வொருவராக இரவுச் சாப்பாட்டுப் பார்சலோடு சங்கமிக்கத் தொடங்கிவிட்டனர் சங்கரன் தனது பாக்கில் இருந்த பணிஸ் பொட்டலத்தை எடுத்துச் சாப்பிடத்தொடங்கினான். ஏதோ இரவு சாப்பிட்டாக வேணுமே என்பதாகத்தானிருந்ததே யொழிய வழக்கமாகச் சாப்பிடும் உணர்வு இன்று சங்கரனிடம் இல்லதிருந்தது. ஐந்து கிழங்கு ஒருரூபாய் ஆ... ஒரு ரூபாய்க்கு ஐந்து என்ற குரலோடு பனங்கிழங்கு விற்கும் சிறுவர்களின காட்சி தெரிந்த போதுதான் பளைஸ்ரேசனில் வண்டி நின்றுவிட்டுப் புறப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டான். குளிர்ந்த காற்று ஊய்ஊய் என்று உடல்மீது உரசிச செல்லும்போது உணர்ச்சிகளை எங்கெங்கோவெல்லாம் இழுத்துக் கொண்டிருந்தது சங்கரனுக்கு

அப்போது அவனுக்கு ஐந்து வயது தானிருக்கும், யாரோ ஒரு குருட்டுக் கிழவனுக்கு வழிகாட்டியாக இருந்தான், அந்தக் கிழவனின் கையையும் சங்கரனின் கையையும் இணைத்து ஒரு குறுந்தடியிருக்கும். பகலில் பஸ்தரிப்பு நிலையங்களிலும் பட்டணத்து வீதிகளிலும் சங்கரன் முன்னே செல்லக் கிழவன் பின்னே சில்லறை உள்ள பிச்சைப் பேணியைக் கிலுக்கியவாறு திரிந்து கொள்வர். மழைகாலங்களில் ரெயில்வண்டியில் பிச்சை எடுப்பதும் எங்காவது வீதியோரங்களில் கடைப்படிக்கட்டுகளில் படுத்து உறங்குவதும் நாளாந்த தொழிலாக இருந்தது. ஏதோ கிடைக்கின்ற பணத்தில் இருவருமாக கடையில் எதையாவது வாங்கிப் பசியைப் போக்கிக் கொள்வார்கள், மிஞ்சுகின்ற பணம் எல்லாம் அந்தக் கிழவனின் பொள்ளல் விழுந்த கந்தை உடையின் ஏதோ ஒரு பகுதியில் முடிந்து பேணப்படும். கடைப்படிகளில் கண்ணுறங்கும் கூட்டத்துள்ளேயிருக்கும் சில கருங்காலிப் பேர் வழிகள் கிழவனுக்குத் தெரியாமலே முடிச்சைக் காலிசெய்து

விடுவதும் உண்டு. பணக்காரர் உலகிலும் சரி பிச்சைக் காரர் உலகிலும் சரி இந்தத் திருட்டுப்பயல்களுக்கு பஞ்சமே யேற்படுவதில்லைப்போலும். சாமிக்குட்டி சாமிக்குட்டி என்று அந்தக் குருட்டுக் கிழவனை எல்லோரும் அழைக்கும் போதெல்லாம் ஏன்டாப்பா சங்கரன் என்றுதான் சங்கரனைக் கூப்பிடுவார்கள். அப்போதெல்லாம் அவனுக்குச் சங்கரன் என்பது தன் அப்பா பேரென்று தெரிந்திருக்கவில்லை என்ருலும் தனக்குச் சங்கரன்தான் பேரெனமட்டும் அவன் எண்ணிக் கொள்ள முடியாதிருந்தது. நொண்டிப் பாட்டி என்று சங்கரன் சொல்லும் அந்தக் கிழவி மட்டும அவனை இராமா என்று அழைப்பதால்தான் இப்படியொரு குழப்பம் அவனிடம் தோன்றியிருந்தது. என்ன தாத்தா எல்லாரும் என்னைச் சங்கரன் சங்கரன்னு கூப்பிடும்போது நொண்டிப்பாட்டி மட்டும் இராமா என்று ஏன் கூப்பிட வேணும். எனக்கு எந்தப் பேர்தான் சொந்தப்பேரோ என்று சங்கரன் கேட்டிருந்தான்.

நொண்டிப்பாட்டி இராமா என்று கூப்பிடுவதாலெழுந்த சந்தேகம் சங்கரனுக்கு ஏதோ ஒரு சிக்கலான இரகசியம் தன்னேடு பின்னிக் கிடப்பதாக உணர்த்தியிருக்க வேண்டும். அந்த நொண்டிப் பாட்டியை அவன் சந்திக்கும் போதெல்லாம் அந்த இரகசியத்தை அறிந்து விடத்துடித்தான்.

நீ இன்னும் கொஞ்சம் வளர்ந்திட்டாயென்ருல் அதைச் சொல்லி விடுவன் வழமையான பல்லவியைப்பாடி மழுப்பிய போதும், அன்று சங்கரன் அழுங்குப் பிடியாகத் தாத்தா இராமா என்று நொண்டிப்பாட்டி ஏன் என்னைக் கூப்பிடுருங்க. அதைமட்டும் சொல்லித் தாங்க இல்லாட்டில் நான் உங்களை எங்குமே கூட்டிப்போக மாட்டன் என்று பிடிவாதம் செய்து கொண்டிருந்தான்

''முடிஞ்சுபோன சங்கதியளைக் கிளறி என்னத்தைக் காணப் போறியோ''... ''ஏதோ உன்ரை பிடிவாதத்திற்கு வேறை மருந்தும் இல்லைத்தானே'' என்றுவிட்டுச், சாமிக்குட்டி

துயரமிகுந்த அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினன். ''அன்று அரசாங்கம் முழுக்க முழுக்க எங்களையே நம்பியிருந்த காலமது. நாங்கள் தோட்டத்தில் வேலைசெய்யாது விட்டால் இந்த நாட்டுக்குச் சோறு கிடைத்திருக்க முடியாத ஒரு நிலை அந்தக் காலத்திலிருந்து உந்தச் சிறீ எதிர்ப்புச் சண்டை வந்து சின்னபின்னப் படுத்தியது வரைக்கும் நாங்களெல்லாம் கண்டிப்பகுதித் தோட்டத்தில்தான் குடியிருந்தோம்.''

''அப்ப எங்க அம்மா அப்பா எல்லாருமே இருந்தாங்களா தாத்தாஎன்று ஆவல்மீற இடைமறித்தான் சங்கரன்''

''கொஞ்சம் பொறப்பா நான் சொல்றதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிரு. அப்புறமாக நான்சொல்லி முடிச்சப்போ நீ கேட்கிற கேள்வியளைக் கேள்.'' என்று அவனைத் தடுத்து விட்டு மீண்டும் தொடர்ந்தான் சாமிக்குட்டி.

அந்தக் காலத்திலே எங்கடை ஆக்களிலே எனக்குத் தோட்டத்துரைமாருக்கிடையிலே ஒரு நல்ல அபிப்பிராயமிருந்தது. அதனுலே என்ரை மகன் சங்கரன் அதாவது உங்கப்பாவை அந்தத் தோட்டத்திலே கங்காணி ஆக்கிவிட்டன். அந்தத் தோட்டத்துச் சனங்களை எல்லாம் நல்லபடி பார்த்துத் தொழில் செய்விப்பான் சங்கரன். கங்காணி சங்கரன் என்ருல் போதும் எந்தத்தொழிலாழியும் மரியாதையாக அவன்டை சொல்லுக் கடங்கி போயிடுவாங்கள். அந்த அளவிற்கு அபிப்பிராய மதிப்பைப் பெற்றுயர்ந்திருந்தான் சங்கரன்.

நொண்டிப் பாட்டியென்று நீ சொல்லுற மருதமுத்துவின்ரை மகள் இராமாயியைச் சங்கரனுக்குக் கட்டிக் குடுத்தன். கல்யாணமாகி ஒருவருஷம் முடிஞ்சப்போ கங்காணியாக வேலைசெய்த உங்கப்பாவை மலேச்சரிவிலிருந்து யாரோ ஒருத்தன் சங்கரன் எதிர்பாராமலேயே கீழைதள்ளிவிட்டான். சங்கரன் வீழ்ந்த இடம் நானூறு அடிப்பள்ளமிருக்கும்

அந்த இடத்திலேயே அவன் செத்துப் போயிட்டான். அவன் சாகும்போது பெறுமாதக் கர்ப்பிணியாக இருந்தாள் உன் அம்மா.

இதைச் சொல்லிக்கொண்ட போது சாமிக்குட்டி தொண்டை கரகரத்துக் கண்ணீர் பொலபொலத்து வீழ்ந்து சிதறியது. மேலே பேசமுடியாது கிழவன் தவித்துக் கொண்டபோது சங்கரன் குறுக்கிட்டான். ஏன் தாத்தா எப்பவோ நடந்த கதையைச் சொல்லிப் போட்டு இப்பஏன் நீ அழுகிருய் என்று கேட்டான். சங்கரன் சிறுவனுக இருந்ததால் அவனிடம் பாச உணர்வுகளோ அதற்கான நெகிழ்வுகளோ ஏற்பட்டிருக்கவில்லை.

எப்பவோ நடந்து போன கதைதான். எப்போதோ நடந்தாலும் அது நெஞ்சிலே பதியும்படி நடந்திருக்கே. நெஞ்சிலே தழும்பேறிப் போனவற்றை மறந்துவிட்டால் இனி ஒரு சம்பவத்துக்கு நாம ஆளாகிப் போகலாமே.... என்ற ஒரு வித பயம்தான் என்னசெய்ய என்றுவிட்டு மௌனமாகி விட்டான். மீண்டும் மீண்டும் பெருகும் நதிபோல அந்தக் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. சாமிக்குட்டி கண்ணீரைத் துடைத்து விட்டு மீண்டும் தொடர்ந்து சொல்லத் தொடங்கினுன்.

தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில் பெரும் சண்டையொன்று அப்பொழுது நடந்து கொண்டது. சண்டை தொடங்குவதற்கு இரண்டுவாரம் முந்தித்தான் நீ பிறந்திருந்தாய். எங்கடை லயன்களுக்குள்ளேயெல்லாம் சிங்களக் காடையர்கள் ஆயுதந்தாங்கியவாறு புகுந்து தமிழர்களையெல்லாம் கண்டபடி வெட்டிக் கொண்டு போட்டு அப்படியே நெருப்பு வைச்சாங்கள். அரையும் குறையுமாத் துடிச்சுக் கொண்டிருந்த தமிழரெல்லாம் நெருப்போடு சாம்பலாகி விட்டனர். உடல்கள் மட்டுமா எரிந்தது உயிர்கள் எமக்கென்று இருந்த உடமைகள் கூட எரிந்து கொண்டன எங்கடை லயனுக்கு அந்தக் கொலைகாரப் பாவியள் வர

முன்னமே நானும் மருதமுத்து அவள்தான் நொண்டிப் பாட்டியுமாக உங்கம்மாவையும் உன்னையும் தூக்கிக் கொண்டு தோட்டத்தைத் தாண்டி காட்டுக்குள் ஓடி ஒழிஞ்சு கொண்டோம். எங்களைப்போல உயிருக்காகப் போராடிய வேறு சிலரும் அந்தக் காட்டுக்குள் ஓடி வந்தனர். அவர்களைக் கண்டுவிட்ட அந்தக் கொலைகாரக்கூட்டம் அவர்களைத் துரத்தியபடியே காட்டுக்குள் ஓடிவந்தனர். காட்டின் மூலை முடுக்கெல்லாம் மறைந்து மறைந்து ஓடினோம். மருதமுத்துவின் கையிலே நீ. எனது கையிலே உன் அம்மா இராமாயி. பாவம் பச்சை உடம்போடு இராமாயியைக் கொண்டோடிய போது அவளுக்கு ஒருவித வலிப்பு ஏற்பட்டு விட்டது.

அம்மா... அம்மா .. என்ரை ராமனைக் காப்பாத்துங்கோ... நான் .. நான்... நான்... பிழைக்கமாட்டனம்மா... நீங்கள் மாமாவையும் கூட்டிக்கொண்டு எப்பிடியும் தப்பிவிடுங்கோ... அதற்குமேல் இராமாயியின் உடல் வலித்து வலித்துத் தடி போல விறைத்துப் போயிற்று. என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் துடித்துக் கொண்டிருந்தபோது கள்ளத் தோணி பறத்தமிழன் எங்கே எங்கேயென்று சிங்களத்தில் அந்தக் காடையர்கள் கத்திக்கொண்டு வரும் சத்தம் கேட்கவே... உயிருக்காக நோயோடு போராடும் ஒருத்தியை விட்டுவிட்டு உன்னுயிருக்காக நாமிருவரும் உன்னோடு தப்பித்துக் கொண்டோம்.

இராசாராணிக் கதைகளான கூத்துக்களிலும் சினிமாவிலும் தான் இராசாக்கள் எதிரிகளால் கொல்லப்பட்டுவிட்டால் பட்டத்துக்குரிய இளவரசன் சிறுவனாக இருந்தால் இப்படிக் காடுகளிலும் ஆச்சிரமங்களிலும் சிரமங்களுக்கு மத்தியில் வளர்ந்ததாகப் படித்திருக்கிறன். ஆனால் நீ... பிறந்ததிலிருந்து நான் பட்ட துன்பங்கள் ச்... சே .. சொல்லிமுடிக்கலாமா என்று சொல்லி சற்று நிறுத்திவிட்டு...ம்... என்று ஒரு நெடுமூச்சை விட்டுக்கொண்டான் சாமிக்குட்டி. சாமிக்குட்டியின் மனப்பாரத்தின் கனதியை அளவிட்டுக் காட்டுவதாக இருந்தது அந்த நெடுமூச்சு.

இராமாயி மட்டும் அந்த இடர்ப்பாடுகளுள்ளும் அந்த மாப் பேணியையும் சூப்பியையும் கொண்டு வந்திருக்காமல் விட்டிருந்தால்... ஒருவேளை இன்று கதைசொல்ல நானும் கதை கேட்க நீயும் இருந்திருக்காமல்கூடப் போயிருக்கலாம். வெறும் தண்ணீரில் அந்த மாவைக் கரைத்து மருதமுத்தி தன் சேலைத்தலைப்பில் அதை வடித்து உனக்குக் கொடுப்பாள். காட்டிலே கிடைத்த விளாங்காய்ச் சிரட்டைக்குள் மாக்கரைத்துப் பருக்குவது அவ்வளவு லேசுப்பட்ட காரியமில்லை. ஏதோ உன்ரை அம்மா செய்த புண்ணியம் ஒரு நோய் நொடியென்று எதுவுமே இல்லாமல் நீ தப்பிவிட்டாய்.

காட்டுக்குள் ஒளிந்திருந்த அந்தப் பன்னிரண்டு நாட்களும் விளாங்காயும் தண்ணியும் சிலவேளைகளில் இலைகுழைகளையும் கூடத் தின்றுதான் உயிர் பிழைச்சோம். மனிதனுக்கு நன்றியில்லா விட்டாலும் இந்த மரங்களுக்கு நன்றி இருக்கத்தானே செய்கிறது. தோட்டத்தில் பயிர்களுக்கு பசளையிட்டு நீரூற்றிப் பக்குவமாக வளர்த்தெடுத்த நன்றிக்குப் பிரதியுபகாரமாகத்தான் இந்த மரங்களும் செடிகளும் வனவாசத்தில் எமக்கு உணவளித்திருக்க வேண்டும்.

கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களையெல்லாம் அகதி முகாமில் தங்கி இருக்கவைத்து சில மாதங்களாக அரசாங்கம் காப்பாற்றியது. எப்படியோ பலத்த சிரமங்களுக்கு மத்தியில் அந்த முகாமுக்கு நாமும் வந்து சேர்ந்து கொண்டோம்.

கிளிநொச்சிப் பகுதியில் இருக்கும் தர்மபுரத்தில் நம் தமிழரெல்லாரும் குடியமர்த்தப்பட்டனர். ஏதோ உன்னையும் வளர்த்துக்கொண்டு அங்குதான் நாங்களும் குடியேறியிருந்தோம். அங்குதான் மருதமுத்தியின் கால் ஊனமுற்றது. ஒரு இரவில் நாம் படுத்துறங்கிய கொட்டிலைப் பிடுங்கிய யானை மிதித்து தள்ளிவிட்டுச் சென்றுவிட்டது. விழுந்த கொட்டிலின் மறுபக்கத்துள் நீயும் நானும் அகப்பட்டுக்கொண்

டதாலோ என்னவோ தப்பிக்கொண்டோம். யானையின் அட்டகாசம் முடிந்து சில நிமிடங்களின்பின் கொட்டிலின் கிடுகுகளைப் பிரித்து உன்னை வெளியே எடுத்துக் கொண்டு வந்து மருதமுத்தியைப் பார்த்தேன். அவளெங்கே இருக்கிருளென்று தெரியாது விட்டாலும் அவளின் முனகல் சத்தம் மட்டும் தெளிவாகக்கேட்டது. குப்பிவிளக்கைத் தேடியெடுத்து ஒருவாறு பற்றவைத்துக் கொண்டபோது தூரத்தில் யானையை விரட்டிச்சென்றவர்கள் பந்தமும் கையுமா வருவது தெரிந்தது. அவர்கள் விரட்டாது விட்டிருந்தால் யானை நம் எல்லோரையுமே ஒருவேளை கொன்றிருந்தாலும் கொன்றிருக்கும். காற்றின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத குப்பிவிளக்கு அணைந்து கொண்ட போது குரல்வைத்துப் பந்தத்தோடு சென்றவர்களை வரவழைத்தேன். பிரித்தெறியப்பட்ட கிடுகுகளின் கீழே மருதமுத்தி அறிவு தெரியாத நிலையில் முனகிக்கொண்டு கிடந்தாள்.

பொழுது விடிந்தபின்தான் ஆஸ்பத்திரிக்கு மருதமுத்தியை எடுத்துச் சென்ருேம். ஒருமாதத்தின் பின் அவள் ஒருகாலை இழந்த நிலையில் நொண்டியாக வந்து சேர்ந்தாள். காலிழந்து கம்பூண்டி நடந்து கொள்ளும் மருதமுத்தியை உனக்குக் காவலுக்கு வைத்துவிட்டு நான் கூலிவேலைக்குச் சென்று திரும்புவேன். மருதமுத்தி ஏதோ உன்னையும் கவனித்து எனக்கும் சமைச்சுப்போட்டாள். ஒருநாள்... மேலே தொடராமல் சாமிக்குட்டி நிறுத்திவிட்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட பாவனையில் இருந்தான்.

''ம்... அப்புறம்... அப்புறம் என்ன நடந்ததெண்டு சொல்லு தாத்தா'' சங்கரன் சாமிக்குட்டியைத் தூண்டிக்கொண்டே இருந்தான். வேறுவழியில்லாமல் சாமிக்குட்டியும் தொடர்ந்தான்.

அப்போது உன்ஞல் நடந்துகொள்ள முடியும். மழை விடாப்பிடியாகப் பெய்துகொண்டிருந்தது. வேலையெதற்குமே செல்லாதிருந்த நான் அன்று சமையல் வேலையைக் கவனித்

துக் கொண்டிருந்தேன். எண்ணெய் சட்டியில் மிளகாயைப் போட்டுப் பொரித்துக்கொண்டிருந்த நான், நீ அருகே வந்ததைக் கவனிக்காமல் மிளகாயின் கவனத்திலேயே சட்டியைப் பார்த்தவாறு இருந்தேன். கையிலிருந்த எதையோ நீ சட்டிக்குள் வீசி எறிந்து கொண்டாய். சட்டியில் இருந்த எண்ணெய் தெறித்து எனது கண்களில் பட்டுவிட்டது. அன்றோடு எனது கண்களும் பார்வையை இழந்துவிட்டன.

மருதமுத்திக்குக் காலில்லே, எனக்குக் கண்ணில்லே. இந்த நிலேயில் நமக்குச் சோறுபோட யாரிருக்கிருர்கள். சோறு போட ஆளில்லேயே என்று வயிறு பசிக்காமல் இருந்துவிடுமா? அப்படி இருக்குமாளுல் இந்த உலகத்தில் பிழைகளே இருந்திருக்க முடியாதே. வேறு வழிகளெதுவுமற்ற எமக்கு இந்த வழியைத்தவிர எதுவுமே தோன்றவில்லே. தர்மபுரத்தை விட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம் அப்பால் தான் எல்லாம் உனக்குத் தெரியுமே என்று சாமிக்குட்டி முடித்தபோது சங்கரன் குறுக்கிட்டான். என்ன தாத்தா என்ரை பேரைப்பற்றி ஒண்டும் சொல்லாமல் விட்டுட்டியளேயென்று கேட்டுவிட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தான்.

ம் அதை விட்டிட்டனென்ன. பத்து வருஷத்துக்கு முந்தின கதையெல்லே. அதுதான் இடையிலே விட்டிட்டன் என்று மீண்டும் சொல்லத்தொடங்கினுன் சாமிக்குட்டி.

தர்மபுரத்தில் நாங்கள் குடியிருந்தபோது கூப்பன் பதிவுகாரரை விதானேயார் வீட்டிலே வந்து பதியச்சொல்லி அறிவித்தார்கள். எல்லோரும் விதானே வீட்டிலே போய்ப்பதிஞ்சு கொண்டபோது மருதமுத்தி போய் எனக்கும் தனக்கும் உனக்குமா கப் பதிஞ்சு போட்டாள். உன்ரை அம்மா சாகேக்கை என்ரைராமன் எண்டு சொல்லிப் போட்டுச் செத்துப்போனதை மறக்காமல் இந்த மருதமுத்தி அப்படியே பதிஞ்சு விட்டாள். அவள் ராமன் எண்டு பதிஞ்சதிலிருந்து ராமா என்றுதான் உன்னேக் கூப்பிட்டுக்கொள்வாள். இப்பொழுதென்ன கூப்பனிலே பதிஞ்ச நாளிலேயிருந்து உன் கூப்பன்பேர் இராமன் தான். அந்தக் கூப்பன் கூடத் தர்மபுரத்திலேதான்... என்

டை தூரத்து உறவுக்காறியான கறுப்பாயி வீட்டிலே கிடக்குது. வீடுவாசலென்று எதுவுமில்லாத எங்களுக்கு கூப்பன் ஏன்? யாராவது பிழைக்கட்டுமேமென்று விட்டுவிட்டேன். என்ன இருந்தாலும் எனக்கு என்ரை பிள்ளைப்பாசம் விடேல்லை. என்ரை மகன் - உன்ரை அப்பாவின்ரை பேரையே சொல்லிச் சொல்லி உன்னை என் மகனாக நினைத்துச் சங்கரா சங்கரா என்று அவனை மறந்துவிட முடியாத பாசத்தால் அவன் நினைவாகவே இப்படிக் கூப்பிட்டுக் கொள்வேன். என்னோடை நீ தினமும் திரிஞ்சதாலை சங்கரன் என்ற பேரே உனக்கும் நிலைச்சிட்டுது. அவ்வளவுதான் என்று ஒரு நீண்ட சரித்திரத்தைச் சொல்லி முடிப்பதுபோல் தன் அவலச் சுமையான வாழ்க்கைச் சரித்திரத்தைச் சொல்லிமுடித்தான் சாமிக்குட்டி.

சாமிக்குட்டியின் நெஞ்சப் பாரங்களெல்லாம் இறங்கிவிட்டதென்பதாலோ அல்லது இனித் தன் கடமை முடிந்துவிட்டதென்ற நினைப்பாலோ என்னவோ அன்று படுத்தவன் எழுந்திருக்கவேயில்லை. பொழுது விடிந்தபின் வாழமுடியாது வாழ்வோடு போராடும் மனித சீவன்களை வாழும்போது கவனிக்காத அரசாங்கம் செத்த பிறகாவது சவ அடக்கத்தைத்தன் செலவில் செய்கிறதே இது போதாதா என்று எல்லோரும் அரசுகளின் பெருமையைப் பேசிக்கொண்ட போது சங்கரன் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தான்.

நீராடும்போது நீரில் மூழ்கிய தன்தந்தையைக் காணது வாடிய திருஞானசம்பந்தரின் அழுகுரலுக்கு மனமிரங்கிய அன்னை பராசக்தி சங்கரனின் அழுகுரலுக்கு மட்டும் ஏனோ இரங்கவில்லை. பாவம் அவன்தான் மனித சமூகத்தின் அடித்தள மனிதனுச்சே. அவனுக்காக எந்தச் சக்தியும் இரங்கிவிடவில்லை. அன்று முழுநாளும் பேமென்ருப் படிகளிலும் பஸ்தரிப்பு நிலையத்திற்குள்ளும் அழுதழுது கிடந்தான் ஆதரவற்று.

சாமிக்குட்டி செத்துப்போன திலிருந்து நொண்டிப் பாட்டியைச் சங்கரன் இன்னும் காணவேயில்லை. சாமிக்குட்டி செத்துப்போனதற்கு முதல் நாளிலிருந்தே நொண்டிப் பாட்டி அந்தப் பட்டிணத்தை விட்டு வேறு எங்காவது சென்றிருக்க வேண்டும். சங்கரன் அந்தப் பேமென்ருக் கூட்டத்தோடுதான் தன்னைப் பிணைத்துக்கொண்டான். சாமிக்குட்டி காட்டிய வழியில் தான் சங்கரன் தன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தான்.

பிச்சை எடுப்பதுகூட இந்நாட்டில் ஒரு தொழில் தானே? ஆம். மூலதனமெதுவுமே இல்லாத தொழில் இந்தப் பிச்சை எடுப்பதுதான் அந்தத் தொழிலைத் தவிரச் சங்கரனுக்கும் அவனைப்போன்ற பட்டிணத்தின் தத்துப்பிள்ளைகளுக்கும் வேறுவழி? இப்படியே காலம் ஓடிக்கொண்டிருந்தது.

சங்கரன் பிச்சை கேட்டுக் கை நீட்டும் போதெல்லாம் எத்தனை கேலித்தனமான வார்த்தைகள். ஏன்டாப்பா நீ ஆண் பிள்ளைதானே. உழைச்சுச்சாப்பிடப் பழகேன். பஸ்ராண்டில

சும்மா கைநீட்டித் திரிவதிலும் மூட்டை சுமக்கலாமே. தேத் தண்ணிக்கடையிலே விறகு கொத்திக் குடுக்கலாமே... ஒழுங் கையிலே ஒண்டு, ரோட்டிலே ஒண்டு பெத்துப் போட்டுவிட் டால்... பிச்சையெடுக்காமல் வேறை என்னத்தைச் செய்யுங் கள். ஒருத்தர் திருவாய் மலர்வார்....

வீட்டிற்குவாவன் நல்லாச் சாப்பிடலாம். நல்ல உடுப்புப் போடலாம் என்ன வாறியா? இப்படி ஒருத்தர் தமது தாராள மனதை அள்ளி வீசிக்கொள்வர் —

பேமென்ருச் சனியனுகள் கிடந்து கிடந்து பண்டிக்கணக்கிலே பெத்துத் தள்ளிப்போட்டு விடுவினம். இவைக்கெண்டு நாங் கள் வரேக்கை பாங்குக்குப் போயெல்லோ வரவேணும். இப் படி இன்னெருத்தர் இடைமறித்துச் சிரிப்பார்.—

விதம் விதமான மனிதர்கள் இந்தப் பேமென்ருப் பிச்சைக் காரரைப்பற்றி இப்படிப் பேசிப்பேசியே பெரிய மனிதராக நடிப்பதை உணராமலேயே நடித்துக்கொள்பவர்கள். உலகத் தில் இல்லை என்று ஒருவனிடம் இரப்பதுதான் இழிவிலும் இழிவு என்று நினைக்கிற இந்தக் கூட்டத்துப் பெரியமனி தர்களுக்கு, இரப்பவனுக்கு இல்லையென்று சொல்லுவது இரத்தலிலும் இழிவென்பதெங்கே தெரியப்போகிறது.—

மேடைகள் கிடைத்துவிட்டால் போதும் ''தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழிப்போம்'' ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'' என்று பாரதியையும் வள்ளுவனையும் சுட்டிக்காட்டிப் பிதற் றிக்கொள்வர்.

சில்லறைகளைக் கொடுக்கும் சிலர் இப்படியும் சிந்தித்து இவர்களையும் அவர்களையும் விமர்சிப்பர். இந்த விமர்சனங் கள் சிலவேளைகளில் இன்னும் மேலே போய் ''வருடத்தில் பத்தோ பதினைந்து நாட்களோ வழிந்தோடும் மழை வெள்

ளத்திற்காகக் கால்வாய்களையும், வாய்க்கால்களையும் வெட்டி வைக்கும் மனிதர்களுக்கு நித்திய கண்ணீர் வெள்ளத்துள் மிதந்து பின் தூங்கி முன் எழும் (கடைகள் பூட்டப்படுமவரை காத்திருந்து படுத்து அதிகாலை திறக்க வருமுன் எழுந்து கொள்வர்) கடைப்படியில் பேதைகளான இவர்களது வாழ்க்கையைச் செப்பனிடவா புரியவில்லை'' என்றெல்லாம் பேசிக் கொள்வர்.

பிறநாட்டு விருந்தினர்கள் இங்கு வருவதென்ருல் போதும். எமது கௌரவங்களைக் காப்பாற்றவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் இந்தப் பிச்சைக்காரர்களை எல்லாம் டிரக்குகளில் ஏற்றிக் கண்காணுத இடங்களில் வைத்து விருந்துபடைத்து விருந்தாளிகளாக்கிக் கூடக்கொள்வர். இப்படி மறைக்கவும் ஏற்றி இறக்கவும் படித்த இந்த மேதாவிகளுக்கு இந்தநிலையிலிருந்து இவர்களை மீட்டெடுப்பதற்கு மட்டும் இன்னமும் வழி திறக்கவில்லையோ? அல்லது இவர்களிடம் மானிட உணர்வுகள் மரத்துப்போய் விட்டனவோ?

பாவம்; வருத்தப்படுபவர்கள் பாக்கியவான்கள். இந்தப் பாக்கியத்தைப் பெற்றமைக்காக அவர்கள் பாக்கியவான்களாகவே இருக்கட்டுமென்ற ஜீவகாருண்யமாகக் கூட இருக்குமோ? இப்படிப் பலதரப்பட்ட சிந்தனைகள் எல்லாம் அவர்களைக்காணும் போதும், இரந்து கெஞ்சி அவர்கள் நிற்கும் போதும் சிலரது மனங்களில் எழத்தான் செய்கிறது. எழவேண்டிய இடங்களில் இந்தச்சிந்தனைகள் எழுவதாக இல்லையே! என்ன செய்வது அந்தச் சிந்தனைகள் எல்லாம் அந்த அளவோடுதானே மரணித்து விடுகின்றனவே.

இப்படியான சிந்தனைகளை எல்லாம் சங்கரன் சிந்தித்தானே இல்லையோ இனிமேல் யார் யாரோவிடமெல்லாம் இரந்து பிச்சை கேட்பதிலும் யாரிடமாவது தொழில் வேண்டியிரப்பது மேல் என்று தனக்குள் தானே முடிவெடுத்துக்கொண்டான். பஸ்வண்டியொன்றிலிருந்து சலவைத்தொழிலாளி ஒருவரின் அழுக்குத் துணிப்பொதிகள் மூன்று கீழே

வீழ்த்தப்படுவதை சங்கரன் கண்டுகொண்டான். அந்த மனிதரிடமே கேட்டுப் பார்ப்போமே... அவனது சிந்தனை வலுப்பெற்றுக்கொண்டபோது அந்த மனிதரிடமே சங்கரன் யாசித்தான். ஐயா.. நான் இந்தப் பொதிகளைத் தூக்கி வந்து கொடுக்கட்டுமா? (அந்த மனிதனின் முகத்தில் வியப்பின் ரேகைகள் படர்கின்றன. இத்தனைகால அனுபவத்தில் அழுக்குத்துணிப் பொதிகளைத் தூக்கித்தாறனென்டு யாருமே கேட்டதாக அவனுக்கு நினைவில்லை) ஏனைய்யா யோசிக்கிறீங்க. நான் சுமப்பன். நீங்கள் வழிகாட்டுங்கோ என்று சொல்லிக் கொண்டே அந்தப் பொதிகளில் ஒன்றைத் தூக்கித்தலையில் வைத்துக்கொண்டான் சங்கரன்.

யாரோ அனாதைப் பயல்போல இருக்கிறான் என்று மனதில் எண்ணியவராக சரிசரி வா வா என்பின்னே வாவென்று விட்டு தானும் மற்றைய பொதியிலொன்றைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு இருவருமாக அந்தச் சலவைத் தொழிற்சாலையை நோக்கி நடந்தனர். சலவைத் தொழிற்சாலைவரை சென்றதும் சங்கரன் ஐயா நானே அந்தப் பொதியையும் போய் எடுத்து வரவா என்று கேட்டுவிட்டு புறப்படத் தயாரானான். அந்த மனிதனின் வாய் திறந்து மூடுவதற்குள் சங்கரன் அந்த மூன்றாவது பொதியோடு வந்து சேர்ந்து விட்டான்.

சரிசரி கூலி என்னவென்று அந்த மனிதன் கேட்டபோது தான் சங்கரன் என்ன ஐயா கூலிதந்து என்னை விட்டுவிடவா பார்க்கிறீர்கள். எனக்கொரு வேலை கொடுங்கையா. உங் கடை கடைக்கு வாற துணியெல்லாம் தோய்த்துத்தாறன். ஏதோ பார்த்துச் சாப்பாட்டுக்கும் உடுப்புக்குமாக ஏதாச்சும் கட்டுமான கூலியைத் தாருங்கோ... என்னை விட்டுடாதீங்க என்ற பாவனையில் சங்கரன் பேசிக்கொண்டிருந்தான்.

சலவைத் தொழிலாளியாக உன்னை வைச்சிருக்கலாம்... நீ சின்னப்பொடியனாக இருக்கிறியே .. அந்த மனிதன் இப்படிச் சொன்னபோது சங்கரன் உப்புச் சலவைக்கு என்னைப்

போன்ற பொடியன்கள் தான் ஐயா சரிப்பட்டு வரும். பெரிய ஆளை வைச்சீங்கன்னு கூலி ரொம்பக் கேட்பாங்களே. சங்க ரனின் பேச்சு ஆலோசனை போலத்தான் அந்த மனிதனுக் குப் பட்டிருக்கவேணும்.

சுட்டித்தனமாகப் பேசுறியே உனக்கு அம்மா ஐயா இல் லையா? அந்தமனிதன் இப்படித்தான் கேட்டு வைத்தார்.

ஐயா என்பேரு ராமன். ஆனா அந்தப்பேரு கூப்பனோடை தானிருக்கு. அதுவும் கைவசம் இப்ப யார் வீட்டிலே கிடக் குதோ எனக்குத் தெரியாது எல்லாருக்கும் தெரிஞ்ச பேர் சங்கரன்தான் ஐம்பத்தெட்டுச் சண்டையிலே அம்மாவைப் பறிச்சிட்டாங்கள். அதுக்கு முந்தி நான் பிறக்கும் போது தான் இருக்கக்கூடாதென்றோ என்னவோ அப்பா போயிட்டார். இதுவரைக்கும் என்னை வளர்த்த தாத்தாவும் இப்ப போய்ச் சேர்ந்து ஐஞ்சுவருசமாய்ப் போச்சு. இந்த ஐஞ்சு வருசமும் நான் பஸ்ராண்டிலேதான் வேலை செஞ்சேன். ஆனா இப்ப அது சங்கடமாயிருக்கையா. வெக்கமாயிருக் கையா பிச்சை எடுக்கிறதுன்னு ஒரு தொழிலைச் செய்ய. அது தான் தொழில்தேடி அலைஞ்சு இப்ப உங்ககிட்டே வந்து நிக்கிறன். பிச்சைக்காரனாக நான் திரிஞ்சு சீவிக்கிறதுதான் சரின்னு நீங்கள் நினைப்பீங்களா? நீங்களே சொல்லுங்கையா நான் உழைச்சு வாழக்கூடாதா? சங்கரன் மூச்சு வாங்கப் பேசிவிட்டு அழத்தொடங்கி விட்டான்.

பிச்சையெடுக்க வெக்கமாயிருக்கையா... ஐஞ்சு வருசமா பஸ் ராண்டிலே தான் வேலசெஞ்சேன்...

அம்மாவை ஐம்பத்தெட்டுச் சண்டையிலே பறிச்சிட்டாங்கள்...

அதுக்கு முந்தி நான்பிறக்கும்போது தானிருக்கக் கூடா தென்றோ என்னவோ அப்பா போயிட்டார்...

சங்கரன் கூறிய அந்த வசனங்கள் அந்த மனிதரின் காது களில் திரும்பத் திரும்ப எதிரொலித்துக்கொண்டே இருந்

தது. சங்கரனைத் துருவித் துருவிப் பார்த்தார். அவன் கண்கள் தண்ணீரில் நீராடிக்கொண்டிருந்த தாமரைபோல் காட்சியளித்துக்கொண்டே இருந்தன. இவனைச் சேர்த்துக்கொண்டால் இந்த நாட்டில் ஒரு பிச்சைக்காரனைக் குறைத்துக் கொண்டவன் நானுகத்தான் இருப்பேன். அவரின் கண்களும் சங்கரனின் கதைகேட்டுப் பனித்திருந்தன. சரிசரி நீ சாப்பிட்டியா? இந்தா இரண்டு ரூபாயிருக்கு கடையிலை போய்ஏதாச்சும் சாப்பிட்டுவா.

வேண்டாங்க. எனக்குப் பசிக்கலே காலைச்சாப்பாடு தினமும் பட்டினியாகக் கிடந்து பழகிப்போச்சு ஏதோ பன்னிரண்டு மணிக்கும் இரவுக்கும் தான் சாப்பிடுவேன். மிஞ்சிப் பசிச்சுதுன்னு ஒரு தேத்தண்ணி ஒரு வடையோடை சரியாய்ப் போகும்.

சங்கரர நீ... என்ன குசேலரின் வாரிசா. இந்தச் சின்ன வயசிலே பட்டினி கிடந்து பழகிட்டியே. அவரின் வியப்பு சங்கரனுக்கு இதமளித்தது.

பட்டினிப் பட்டாளமெண்டு சில கனவான்கள் பேசுவது சும்மா இல்லை ஐயா. அது உண்மையிலேயே அநுபவ வார்த்தைகள் தான். பிச்சைக்காரர்களால் உலகின் உணவுத் தொகையில் எவ்வளவு மீதப்படுத்தப்படுகிறது என்பதைச் சரியான புள்ளிவிபரம் எடுத்தால் அது ஒரு சுமாரான வீதத்தைக் காட்டும். அந்தளவில் மட்டும்தான் நாமெல்லாம் இந்த நாட்டிற்கு உறுதுணையாக இருக்கிறோம். ஏனையவை எல்லாம் வெறும் சுமைதான்.

சரி சங்கரா நீ புத்திசாலி மட்டுமல்ல சிந்தனையாளனும்கூட என்பது உன்னோடு பேசிக்கொண்ட போதுதான் புரிந்துகொண்டேன். இன்று முதல் இந்த லோண்டரியிலேதான் உனக்கு வேலை. வாற உடுப்புகளுக்கு சிட்டை நம்பரின்படி தவருமல் நம்பர் குறித்து கலர் உடுப்பு வேறையாகவும் வெள்ளை உடுப்பு வேறையாகவும் பிரித்து வைத்தலும் ஸ்தி

ரிகைக் போடுதலும் தான் உனக்குவேலே தெரிஞ்சுதா என்று கூறிவிட்டு மேசையிலிருந்த ராசரூபனே அழைத்துச் சங்கரனே அறிமுகம் செய்து வைத்தான். அறிமுகம் முடிஞ்சதும் சங்கரன் ஐயா எனககு இந்த எழுத்து வேலேயெல்லாம் தராதையுங்கோ. ஏனென்ருல் அதுதான் எனக்குத் தெரியாதே. நான் பள்ளிக்கூடப் பக்கமே பார்க்கவில்லேயே என்று விட்டுத் துணி துவைக்கிற வேலேயையும் ஸ்திரிக்கை போடுற வேலேயையும் விட்டிடுங்கோ. நல்லாச் செய்கிறேன் என்ருன். சரிசரி எப்படியோ உனக்கு இஞ்சை வேலேதந்திருக்குச் சரிதானே என்ருர் முதலாளி.

சரிங்க ஐயா என்று தன் நன்றிப்பெருக்கைக் கண்ணீரால் காட்டி நின்ருன் சங்கரன்.

இந்த உலகத்தை வென்று விடும் வழியில் இப்போது தான் அவன் கால்பதிக்கப் போகிருன் என்பதை எண்ணிப் பெருமைப்பட்டான், மனிதன் மனிதனுக வாழ ஆசைப் படலாம் இந்த நியாயமான நினேவுமட்டும் ஒவ்வொருவருடைய மனங்களிலும் உதித்து விட்டால்...... மனிதன் எல்லாம் தெரிந்தவனுகி விடுவான். இல்லேயேல் வெறும் மனித ஜடமாகத்தான் வாழ்ந்து கொள்ளநேரும் இப்படிச் சங்கரன் எண்ணியபோது, " நீதாண்டா ஆண்மகன் " என்று முதலாளி சங்கரனின் முதுகில் தட்டிக் கொடுத்தார். முதுகில் யாரோ தட்டியது போன்ற உணர்வு. அப்போது தான் சங்கரன் தன் கடந்தகால நினேவுகளில் மூழ்கிக் கிடப்பது புரிந்தது. திருதிருவென்று முழித்துக்கொண்ட சங்கரன் முதுகில் தட்டியது யாரென்று அந்தப் பெட்டிக்குள் விழிகளேச் செலுத்தித் துளாவிக்கொண்டான். மீண்டும் ரெயில் ஒரு உலுக்கு உலுக்கிக் கொண்டு நின்றபோதுதான் அது யாருமில்லே ரெயிலின்உலுப்பலென்று புரிந்து கொண்டான். அந்த நிலேயிலிருந்து விடுபட அவனுக்கு அதிகநேரம் எடுக்கவில்லே.

தெம்பிளி தெம்பிளி தெம்பிளி... வடே வடே வடே... தெல்மது தெல்மது தெல்மது... ஆ... பார்லி... பார்லி... பார்லி... ஒன்றன் பின் ஒன்ருக எழுந்த குரல்கள் போட்டியிட்டு எதிரொலிக்க, ரெயில் வியாபாரிகள் காட்சி கொடுத்தனர். பணிஸ் சாப்பிட்டதாலும் தூக்கக் குறைவாலும் சங்கரனுக்குத் தாகம் எழுந்து கொண்டது. சங்கரன் கேட்டு முடிப்பதற்குள் செவ்விளநீர்க்காரன் றுப்பியல் தெகக் என்று கொண்டே அவனை எதிர்பார்க்காதுகையில் வைத்து அப்படியும் இப்படியுமாக இரண்டு கொத்துக் கொத்திவிட்டு நீட்டினுன். இரண்டு ரூபாய் அதிகம்போல தான் இருந்தது சங்கரனுக்கு. என்ருலும் அவன் கொத்திவிட்டானே என்ற நச்சரிப்போடு வாங்கிக்குடித்துவிட்டு இரண்டு ரூபாய் தாளொன்றை எடுத்து நீட்டினுன். மாத்தயா தெக் காய் பணகாய் என்று கையை நீட்டினுன் அந்தச் செவ்விள நீர்க்காரன். என்ன... குடித்த இளநீர் ஒருமுறை எரிந்தது போலத்தான் இருந்தது சங்கரனுக்கு. என்ன செய்வது குடுத்துத்தானே தீரவேண்டும்

சில்லறையாக ஐம்பது சதத்தைக் கொடுத்துவிட்டு அவனையே வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான் சங்கரன். ஏமாற்றுக்காரர்கள் ஒன்றைச் சொல்லி ஒன்றைக் கேட்கிறுன். நியாயம் கேட்கப்போனுல் பறத்தமிழா அது இது என்று வாயில் வந்தபடி திட்டித் தீர்த்துக்கொண்டு சண்டித்தனம் வேறு செய்து துலேச்சிடுவாங்க. ம்... என்ன செய்வம் என்றுவிட்டு பேசாமல் இருந்துகொண்டான்.

யாரோ ஒரு உயர்ந்த மனிதர் சங்கரனிருந்த இடத்திற்கு அப்பால் சென்று மறைந்தபோதுதான் அந்த மனிதனேச் சங்கரன் அடையாளம் கண்டு கொண்டான். அவர்... அந்த மனிதர்... சே.. அது தம்பித்துரை மாஸ்டர்தான். எங்கு போகிறுரோ? ஒருவேளே பபற்றுக்குத்தானே? அப்படித்தானிருக்கும் தம்பித்துரை மாஸ்டரைக் கண்டதிலிருந்து அவரது பங்களிப்பை நினேத்து நினேத்து சங்கரன் கண்ணீர் விட்டான். அது என்ன கண்ணீரா அல்லது .. ஆம் சங்கரனின் கண்களிலிருந்து வந்தது ஆனந்தக் கண்ணீரேதான். யாழ்ப்பாணச் சலவைத் தொழிற்சாலேயில் தொழிலாளியாகப்பணி புரிந்த சங்கரன் தொழிற்சங்கவாதிகளோடு தொடர்பு கொண்டு தொழிலாளர் உரிமைக்காகப் போராடத் தொடங்கியிருந்த காலமது.

திடீரெனச் சில தொழிற்சாலேகளில் வேலே செய்யும் தொழிலாளர்கள் வாழ்க்கைச்செலவு உயர்வு காரணமாகச் சம்பள உயர்வு கோரிப் போராடிக் களத்தில் குதித்தனர். அவர்களின் போஸ்டர்கள் விளம்பர நோட்டீஸ்கள் இரவோடிரவாக ஒட்டுவதற்கு சங்கரனும் சென்றிருந்தான். சங்கரனின் தொழிற்சங்கப் போராட்டத் தலேயீடுகளே முதலாளி ஆரம்பத்திலிருந்தே தடுத்து வந்துதான் இருந்தார். சங்கரன் முதலாளியின் தடையை மீறி சகல போராட்டங்களிலும் ஈடுபட்டுக் கொண்டான்.

சங்கரன் வேலேயிலிருந்து நீக்கப்பட்டான். அப்போது சங்கரனுக்கு பதினுன்கு அல்லது பதினேந்து வயதுதான் இருக்

கும். வயதிற்கு மீறிய உடல் வளர்ச்சி அவனையொரு வாலிபனாகவே ஆக்கிவிட்டிருந்தது. வேலையை இழந்ததால் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கவேண்டி வந்துவிடுமோ என்ற அச்சம் அவனை ஆட்கொண்டிருந்தது. மூன்று நான்கு தினங்களாகச் சங்கரன் தூக்கமின்றித் தவித்தான். எங்காவது ஒரு வேலையில் சேர்ந்து கொண்டு விடவேண்டுமே என்ற தவிப்பு அது. அந்த வேளையில் தொழிற்சங்கவாதிகளின் உதவியால் தம்பித்துரை மாஸ்டரின் புத்தகக்கடையில் வேலை கிடைத்தது. அவர் மட்டும் அன்று அப்படிச் சேர்த்துக் கொண்டிருக்காதிருந்தால் ஒருவேளை இந்தச் சங்கரன் வேறு ஒரு சங்கரனாக மாறியிருப்பானோ அல்லது எங்காவது சென்று சோம்பேறியாயிருந்து சீரழிந்து வயிற்றை நிரப்புவதிலும் பார்க்க செத்துப்போகலாமே என்று தன்வாழ்வை முடித்துக் கொண்டிருப்பான்.

தம்பித்துரை புத்தகக்கடை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் தான் அமைந்திருந்தது. பத்திரிகையாளர்கள் இலக்கியகர்த்தாக்கள், எழுத்தாளர்கள் என்று பலதரப்பட்டவர்கள் ஒன்று கூடும் இடம் என்றால் அது தம்பித்துரை புத்தகசாலைதான். ஆரம்பப்பள்ளிக்குக் கூடச் சென்றிருக்காத சங்கரனுக்குப் புத்தகசாலையில் நின்று வியாபாரம் செய்வது பெருஞ்சிரமமாகப் போய்விட்டது என்ன செய்வது அவன் யாருமேயற்ற அனாதையாகப் பிறந்தது ஒரு குற்றம். பேமென்று வாழ்க்கைக் குடும்பங்களோடு வாழ்ந்தது இன்னொரு குற்றம். பேமென்று சமூகமென்று ஒன்றைச் சிருட்டித்துவிட்ட இந்தச் சமூகம் அவர்களை இப்படிச் சித்திரவதைப்பட வேண்டுமென்றுதான் இப்படிப் படைத்துக் கொண்டதோ? இந்தப் புதிய வர்க்கத்தை உலகின் மூலைமுடுக்குகளில் இருந்தே அகற்றி இந்த வர்க்க மனிதர்களும் ஏனைய மனிதர்களைப் போல வாழ வைக்கக்கூடிய ஒரு புதிய சமூகத்தை இந்த உலகம் எப்போதுதான் பூரணமாகத் தோற்றுவிக்கப் போகிறதோ. இப்படியே எண்ணிக்கொள்ளும் சங்கரனுக்கு இந்தச் சமூகம் என்ன உலகமே ஒரு சந்தையாகத்தான் தெரிந்தது. அந்தச் சந்தையிலே கிடைக்கின்றதைக் கொண்டு

வயிற்றுப்பசியைப் போக்குவதும் வீதிப்படிகளில் இரவுவேளை படுத்து உறங்குவதையும் தவிர அவனுக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

சமூகத்தின் நடுத்தெரு நாராயணர்களில் ஒருவனாகச் சங்கரன் வாழ்ந்திருந்தபோது அடைந்த துன்பங்களும் துயரங்களும் அந்த நடுத்தெரு வாழ்க்கைக்கு அப்பால் வந்தபோது தான் சங்கரனுக்குத் தெரிந்தது. அந்த நடுத்தெரு வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகள் அவனைச் சதா வாட்டிக் கொண்டே இருந்தது. அந்த வாழ்க்கையில் இருக்கும் மனிதர்களுக்காக அவன் தனிமையிலிருக்கும் போதெல்லாம் தேம்பித்தேம்பி அழுவான். எப்பொழுது தான் இந்த விலங்கு வாழ்க்கைக்கு விடிவு வருமோ என்று புலம்புவான். அந்தப் புலம்பல் காற்றில் கலக்கும்போது கண்ணீரைவிட அனல் மூச்சாக அவன் நெஞ்சத்திலெழும் நெடுமூச்சாக அந்தக் காற்றும் மாறிச் சுட்டுவிடும். அந்தச் சூட்டிலும் அவனது சிந்தனைச் சிறகுகள் இப்படித்தான் படபடத்துக் கொண்டிருக்கின்றன.

அம்பலத்தே படுத்துறங்கி பிள்ளைகுட்டிகள் பெற்று சாவோடு நித்திய குளிரிலும் காற்றிலும் போராடி வாழும் இந்த விலங்கு வாழ்க்கை மனிதனுக்கு ஏன் வரவேண்டும். இப்படியொரு வர்க்கம் உருவானால் தானே இன்னொரு வர்க்கம் உயர்வான வர்க்கமாகப் பரிணமிக்குமோ? அவனால் விடைகாண முடியாத வேதனைகள் அவன் நெஞ்சை அடைத்துக் கொள்ளும்.

சிந்திக்க முடிகின்ற அளவிற்குச் சங்கரனால் பேச முடியவில்லை. எழுத முடியவில்லை. பள்ளிக்கூடம் என்ற ஒன்றை அவன் அறிந்திருக்கவுமில்லை. அறியவேண்டிய நிலையும் அவனுக்கு ஏற்பட்டிருக்கவில்லை.

புத்தகசாலையில் தொழில் செய்வது சங்கரனுக்கு மிகுந்த சிரமமாகவேயிருந்தது.

''சங்கரா நீ இனிமேல் தினசரிப் பேப்பர்களை பஸ்ராண்டிலே கொண்டுபோய் விற்றுக்கொள்ள வேண்டும்'' தம்பித்துரை மாஸ்டர் இப்படித்தான் பணித்து அவனைப் பத்திரிகை விற்பனையாளராக்கிக் கொண்டார். பத்திரிகை விற்பனையாளனாக சங்கரன் வீதிகளிலும் பஸ்ராண்டிலும் சுற்றிச் சுற்றி வரும்போதெல்லாம் பழைய பிச்சைப்பாத்திரக் கூட்டாளிகளோடு சல்லாபிப்பான். அவர்களுக்கு உதவவேண்டிய தருணங்களில் உதவிவிட்டுத் தனது சம்பளத்தையும் இழந்து சாப்பிடுவதற்குக் கூட ஏதுமில்லாது மிக வாதைப்படுவான். அவன் இப்படி வேதனைப்படுவது பலருக்கு வேடிக்கையாகவும் சிலருக்கு வேதனையாகவும் இருந்தது. ஆனால் சங்கரனுக்கு ஏதோ ஒரு வித நிறைவாகத்தான் இருந்தது.

சங்கரனின் இந்த வியாபாரமும் நட்டத்தில் தான் ஓடிக்கொண்டிருந்தது. தம்பித்துரை மாஸ்டர் கண்டிப்பு தினம் தினம் சங்கரனுக்குக் கிடைத்துக் கொண்டுதான் இருந்தது. அவரது கண்டிப்பு நாளும் பொழுதும் நிகழும்போது சங்கரனின் மனம் தீய்ந்து கொண்டேயிருந்தது. தனக்குக் கல்வியறிவு இல்லாது போனதற்காக அவன் தன்னை நினைந்து கண்ணீர் வடிப்பான். அப்படியான நினைவுகள் நெஞ்சில் பீறிட்டு எழும்போதெல்லாம் சாமிக்குட்டித் தாத்தாவை நினைத்து மனதாரத் திட்டுவான். இப்படி ஒரு நடமாடும் பிணமாக என்னை நடமாட வைத்ததிலும் பார்க்க அப்பொழுதே என்னைச்சாகவிட்டிருக்க வேண்டும். எழுத்தறிவோ படிப்பறிவோ ஏதோ ஒன்றுயினும் இல்லாதபோது தான் மனிதன் ஏழையிலும் ஏழையாகி வெறும் மிருகமாக மாறி விடுகிருன். இப்படியான இடர்ப்பாடுகளும் பிச்சையெடுப்பதற்கு ஒரு காரணமாகிவிடுமோ? மிருகங்களின் வாழ்வில் இப்படியெதுவுமே இல்லை. என்றுலும் அவை சந்தோஷமாக வாழ்கின்றன. ஆனுலும் அது மிருகவாழ்க்கைதானே. ஆனல் மனிதன்... மனிதவடிவில் இருந்து கொண்டே மிருக வாழ்க்கை வாழ்வதென்ருல் ஏன்தான் இந்த வாழ்க்கையோ?

அன்று தலைநகரிலிருந்து வெளியாகும் பத்திரிகை எதுவுமே வரவில்லை. ரயில் தடம்புரண்டதால் ஏற்பட்டுவிட்ட தடை பலவிதமான வதந்திகளையும் நாட்டில் கிளப்பிவிட்டிருந்தது. வதந்தி வதந்தியாக வருகிறது. அதைத் தட்டிக்கழிக்க முடியாதவாறு உண்மையைக் கவசமாக்கிப் போர்த்துக்கொண்டல்லவா வதந்தி எல்லா மனங்களிலும் புகுந்து விடுகிறது. இந்த வதந்திக்காற்றை எதிர்ப்பது போலத்தான் சங்கரன் அந்த வீதியில் நடந்துகொண்டிருந்தான்.

வெறிச்சோடிப்போன சங்கரனின் பார்வையில் தூரத்தில் யாரோ தெருவில் வீழ்ந்து விடுவது மிகத்தெளிவாகத் தெரிகிறது. எதையுமே அவன் பொருட்படுத்தியதாக இல்லை. வீதியிலே வந்த வாகனங்கள் எல்லாம் நிரை விழுத்திச் சுற்றுலா வரும் எறும்புக்கூட்டம் போல நிற்கச் சங்கரன் மட்டும் வீழ்ந்து கிடந்த அந்த மனிதரைத் தூக்கியவாறு ரைக்சி ரைக்சி... என்று கத்தினன். மனிதக்குரல் எப்போது தம்பக்கம் விழுமோ என்று காத்திருந்ததுபோல போட்டி போட்டவாறு ராக்சிகள் வந்து சேர்ந்தன. விழுந்த மனிதனைத் தூக்கி வைத்திருந்த சங்கரனின் மீது பல மனிதக்கண்கள் மொய்த்துக் கொண்டன. ஆயினும் உதவக்கூடிய அளவிற்கு யாருமே வரவில்லை. அருகே வந்துவிட்ட ராக்சி ஒன்றில் சங்கரன் அந்த மனிதனைத் தூக்கி ஏற்றிக்கொண்டு அருகேயிருந்த பெரியாஸ்பத்திரிக்குச் சென்றுகொண்டான்.

ஆஸ்பத்திரிக் கட்டிலில் அந்த மனிதனைக் கிடத்திக்கொண்ட போதுதான் சங்கரனுக்குச் சரம் சஞ்சிகையின் ஆசிரியர் கூத்தன் என்பது தெரியவந்தது. தம்பித்துரை கடையில் சங்கரன் வேலைசெய்த வேளைகளில் சஞ்சிகை போடவந்த வேளைகளில் அவரை அவன் பார்த்திருந்தான். என்னதான் அவன் கூத்தனை அறிந்திருந்த போதும் கூத்தனுக்கு அவனைத் தெரிந்திருக்கவுமில்லை. கூத்தனேடு அவன் பரிச்சயமானதுமில்லை.

சுயநினைவுகளற்ற பிணம் போலக் கூத்தர் ஆஸ்பத்திரிக்கட்டிலில் கிடந்தார்.

சிகிச்சைகள் முறைப்படி நடந்தபோதிலும் கூத்தருக்கு இன்னமும் நினைவு திரும்பவேயில்லை.

கூத்தருக்கு நினைவு திரும்பும் வரையில் சங்கரன் கூடவே நின்று உதவினான்.

கூத்தரின் விழிகளில் உணர்வின் துடிப்பு தென்படுகின்றது. அந்த விழிகளின் அசைவினைக்கண்டு சங்கரனின் முகம் ஆனந்தமடைந்தது. ஒரு மனிதனைக் காப்பாற்றிவிட்ட மனிதாபிமான உணர்வு அவனிடத்தில் நிறைந்திருந்தது.

கூத்தர் விழிகளைத் திறந்து கலங்கிய தன் பார்வையில் சங்கரனின் முகம் தெரிந்தபோது... நீ யாரப்பா... கூத்தர் சங்கரனிடம் இப்படித்தான் கேட்டார்.

இனம்புரியாத ஒரு இன்பநிறைவில் தோய்ந்திருந்த சங்கரன்... நான்... நானுங்க... சங்கரன்... பட்டணத்துத் தெருவிலை குடியிருப்பவன். யாருமே இல்லாத ஒரு அனாதைங்க ஐயா என்று அடுக்கிக்கொண்டே இருந்தான்.

கூத்தர் சங்கரனை நெருங்கி வரும்படி கையினால் சைகை செய்தார்.

சங்கரன் கூத்தரின் கைகளுக்குள் தன்னைக் கொடுத்துவிட்டு எதையோ நினைத்தவனாக அழுதுகொண்டான்.

சங்கரனும் அழுதான். கூத்தரும் அழுதார், இருவருமே ஏனிப்படி. அழுகிறார்களென்பது மட்டும் யாருக்கும் புரியவில்லை. உணர்ச்சிகள் ஒன்றிவிட்டால் செயலும் ஒன்றாகித்தான் விடும். அந்த ஒன்றான நிலையில் இப்படித்தான் கண்ணீர் வருமென்பதுபோல இருவர் கண்களிலிருந்தும் கண்ணீர்த்துளிகள் வீழ்ந்து சிதறின.

நீண்ட மௌனத்தின்பின் கூத்தர்தான் குரல்கொடுத்தார். தம்பி சங்கரா நீ இனிமேல் உன்னை அனாதையென்று சொல்

லாதே. இத்தனைகோடி மனிதர்கள் வாழும் இந்த உலகில் நீ எப்படியப்பா அனாதையாகிவிட முடியுமென்பது போல அவரின் பார்வை இருந்தது.

அன்றிலிருந்து சங்கரன் கூத்தருக்கு எல்லாமாக ஆகிவிட்டான். மறக்கமுடியாத அந்த நினைவுகள் சங்கிலிக்கோர்வை போல சங்கரனின் அடிமனத்திலிருந்து கோர்வை கோர்வையாக எழுந்துகொண்டே இருந்தது.

அந்த நினைவுகளிலிருந்து சங்கரன் மீண்டுகொண்டபோது அடுத்துவரும் ஸ்ரேசன் எது என்பதே கேள்வியாக எழுந்து நின்று சதிராடிய போதுதான் கோட்டை ஸ்ரேசன் அது தானென்று அவன் மனம் சொல்வதைப் புரிந்துகொள்ள சங்கரனுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை.

வைகறையின் குளிர்த்தென்றல் குளிரூட்டிச் சென்றபோது சங்கரன் கோட்டை ஸ்ரேசனைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தான்.

வீதியைக் கடக்கும் உயரப்படிகளில் ஏறி வீதியைக் கடந்த சங்கரன் லெட்சுமிவிலாஸ் சைவக்கோட்டலுக்குச் சென்றுகொண்டான். சரம் சஞ்சிகையின் கொழும்பு ஏஜென்ஸியாகவும் விற்பனையாளராகவும் லெட்சுமி விலாஸ் உரிமையாளர் சங்கரப்பிள்ளை இருந்ததால் சங்கரனுக்கு; தங்குவதற்கு வேறு எங்கும் செல்லவேண்டியநிலை ஏற்படவில்லை.

தேனீர் அருந்திவிட்டு மாடிப்படிகளில் சங்கரன் விழிகளை மேயவிட்டான். சங்கரப்பிள்ளை மாடிப்படிகளில் இறங்கிவருவது தெரிகிறது. சங்கரன் எழுந்து நின்றுகொண்டான்.

ஓ.. சங்கரா... ஏது திடீரென இந்தப்பக்கம் என்றார் சங்கரப்பிள்ளை.

இன்று பரிசளிப்புவிழா ஒன்றிருக்கு. அதுதான் திடீரென்று... வார்த்தைகள் வழுக்கி விழுந்தன.

ஆ... அப்படியா... ஓ... இப்பதான் ஞாபகம் வருகிறது. உனது நாவலுக்கான பரிசளிப்புவிழாத்தானேயென்று மேலும் கேட்டுக்கொண்ட சங்கரப்பிள்ளை மேலே போய் ஆயத்தப் படுத்திக்கொண்டுவா என்று கூறிவிட்டு ஒவ்வொருபடியாக எண்ணுவதுபோல இறங்கிக்கொண்டிருந்தார்.

சல சலப்பின்றி ஓடும் தெளிந்த நீ ரோடையைப் போல சங்கரன் கைப்பையோடு மாடிப்படிகளில் ஏறிச்சென்று மறைந்தான்.

சங்கரன்மீது சங்கரப்பிள்ளையரின் பார்வை ஆழமாகப் பதிந் திருந்தது. அந்தப் பார்வையின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள அங்கு யாருமேயில்லை.

நதி மூலமும் ரிஷ மூலமும் பார்க்கக் கூடாது. என்று பேசப்டுவதன் உண்மையை இப்போது நேருக்கு நேராக உணர்ந்தது போல் சங்கரப்பிள்ளையின் மனம் கூறியது. எங் கோபிறந்து எங்கெங்கோ அலைந்து இப்படி எல்லோராலும் மதிக்க கூடிய ஒரு நிலையை சங்கரன் அடைந்து விட்டது பிரமிப்புக்குரியது தான். இந்தப்பிரமிப்பின் பெருமை சங்க ரனுக்கு உரியதா அல்லது கூத்தனுக்கு உரியதா என்பதை எப்படித்தீர்மானிப்பதென்று தடுமாறிக் கொண்டிருந்த சங் கரப்பிள்ளை .. எல்லாம் காலம், தீர்மானிக்கும். காலத் தைப் போல் சிறந்த விமர்சகன் இல்லைத்தானே என்றுவிட்டு கவுண்டர் பக்கம் சென்றார்.

காலைக்கடன்களை முடிந்துக் கொண்டு குளியலறைப் பக்கம் சென்று குழாய்நீரில் நன்றாகக் குளித்தான் சங்கரன். காலையில் அந்தக் குழாய்நீர் இரவு பூராத்தூக்கக் குறைவால் கொதிப்பேறிய உடலுக்கு வெகு இதமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் கிணற்றோடு குளித்து முழுகிப் பழகிப் போனவர்க்கு இந்தக் குழாய் நீர்க்குளிப்பு ஏதோ சப்பென்று தானிருக்கும். என்றாலும் சங்கரனுக்கு அதுகூட நன்றாகத் தானிருந்தது.

தெருக்கோடியில் கிடந்து தூங்கியெழும்போது இது கூடக் கிடைப்பதில்லையே என்ற ஏக்கம் அவனுக்கு எப்போதுமிருப்பதால் எந்த வசதிக்குறைவுமே அவனுக்கு ஒரு பொருட்டாக இருப்பதில்லை. எல்லாம் நமக்குத்தானே என்று வேறு சொல்லிக் கொள்வான். பிரயாணக் களைதீரச் சிலமணிநேரம் படுத்திருக்கலாமோ என்று எண்ணியபடி சங்கரன் மாடியிலேயே படுத்து உறங்கிவிட்டான்.

## 7

சங்கரப்பிள்ளை முதலாளி சங்கரா சங்கரா... என்று சத்த

மிட்டபோதுதான் சங்கரன் விழித்துக் கொண்டான் என்ன சங்கரா மணி பன்னிரண்டாச்சே. இன்னும் தூக்கம் கலேய லேயா? என்றவாறு நின்றிருந்தார்.

ஐயா நீங்களா... படுத்தாப்போல தெரியாதா இராத்திரிப் பூராவும் தூக்கம் அவ்வளவாக இல்லே. என்னே மறந்து தூங்கிட்டேன். இனி புறப்படவேண்டியதுதான்.

என்ன; கூத்தன் எல்லாம் எப்படிச் சுகமாக இருக்கிருரா? இந்த மாதச் சஞ்சிகை இன்னும் முடியலேயா? அதிருக்கட்டும் பரிசென்ன தருவாங்களோ... சங்கரப்பிள்ளே அடுக்கிக் கொண்டே போனுர்.

ஐநூறுருபாய் பரிசுன்னுதான் பத்திரிகையிலே விளம்பரம் வந்திருந்தது. இன்மேல் என்ன நடக்கப்போகுதோ யாருக்குத் தெரியும்.

அதுசரி எழுத்தாளன் பரிசை எதிர்பார்த்தா எழுதுகிருன். அவன் ஏதோ ஒரு நோக்கத்தை வைச்சு எழுதுருன். இவங்கள் பரிசு கொடுக்கிறதுக்கு மட்டும் எத்தனேயோ சாட்டுப் போக்குச் சொல்லி .. ஆ .. சிலவேளே சான்றிதழோடையே முடிச்சிடுவாங்க இல்லேயா சங்கரன்.

சரிதானுங்க ஐயா... எனக்கு எதைத்தந்தாலும் இம்முறை அதிக சந்தோசம்தான் என்ருலும் பணப்பரிசு தந்தால் நல்லதுதான். வரும்போதுகூட கூத்தன் ஐயாதான் இருநூறு ரூபாய் தந்தார். அந்தக் காசையாவது கொடுத்துவிடலாம் என்றுதான் எண்ணியிருக்கிறன். இனி நடப்பதைப் பார்ப்பமேன். சங்கரனின் எதிர்பார்ப்பு அவனது கஷ்டத்தைவைத்துத்தான் எழுகிறது என்பதைச் சங்கரப்பிள்ளேயும் இனங் கண்டு கொண்டார்.

ஏன் சங்கரன் கூத்தன் எவ்வளவு தாருர்.

என் தேவைக்கேற்ப ஏதோ தாருர். நான் இவ்வளவென்று கேட்பதேயில்லை. இந்த நிலைக்கு நான் வந்திருப்பதே கூத்தன் ஐயாவாலைதானே. நடுத்தெரு நாராயணனுகப் பிச்சைப் பாத்திரத்தோடை நின்ற நான் இப்ப தலைநகரிலை பரிசுபெறும் படைப்பாளியாக வந்திருப்பது அந்தக் கூத்தன் ஐயாவாலைதானே. என் முதற்பரிசு முழுத்தொகையும் எவ்வளவென்ருலும் அது சரம்சஞ்சிகை நிதிக்குத்தான் என்று முன்பு ஒருமுறை சொல்லி வைத்திருக்கிறேன். அதுதான் 'சரத்தி'ற்கு நான் செய்யப்போகும் சிறு உதவி. சங்கரனின் ஆவேசமான பேச்சோடு சங்கரப்பிள்ளையும் சேர்ந்து நன்றிக் கடன் செய்யத்தானே வேண்டுமென்ருர்.

சங்கரனின் ''சிறிய உதவி''யையும் அவனது நன்றி பாராட்டும் பண்பையும் கண்டு சங்கரப்பிள்ளை அதிர்ந்து போனுர். கூத்தனேடு இருந்து வளர்ந்து எழுத்துலகில் கால்பதித்து நிமிர்ந்து நிற்கும் பலர் இன்று கூத்தரின் முகதரிசனமோ நினைவுகளோ இன்றி ஏதோ வானிலிருந்து குதித்து வந்த இலக்கிய ஜாம்பவான்கள் தாமே எனக் கர்வித்துலவிவரும் போது இந்தச் சங்கரன்...

''காத்திருந்த பெண்ணழகி கரைகின்ருள் தேனடையாய்
பார்த்திருந்தோனிதழ் முழுதும் தேனடையுள் சங்கமிக்கும்
கோத்திரங்கள்தமை மறக்கும்
கொள்கைதனில் வலுவேறும்
பெற்ருேர்தமைத் துறந்து புதீயகிளை ஆருகும்''

வானரசி வந்து நின்ருள்
தானழகின் தலைவியென
தேன்குடத்தைச் சுவைப்பவரைக்காணுத ஏக்கத்தால்
வானத்துக் கருமுகிலாய் கறுத்த திருவதனப்
பூமுகத்தில் நீர்க்கோடு மலர்மேவு பனித்துளியாய்
காற்ருேடு வந்தவண்டு கடிமலரிலே உறிஞ்சும்
காட்சியொடு வந்திருந்தான் கண்ணுன கட்டழகன்
பித்தாய்க் கிடந்தவளும் சொத்தானுள் அவர்கைக்குள்
இருவர் புவிமறந்து போய்விட்டார் எங்கோ
சித்தங்குளித்ததென தென்றலது தாலாட்டும் ''

சரம் சஞ்சிகையில் வராத கவிதைகள் இவைதான்' இப்படி இழமையைத் தூண்டிப் பாலியற் கேட்டைத் தூவிவிடக் கூடிய கவிதைகளை ஒருபோதும் வெளியிடுவதில்லை. சரம் மனிதனை மனிதனாக்கி ஒரு செழுமை மிக்க சமூகத்தைப் படைப்பதற்காகவே தன் பணியைச் செய்து கொண்டிருக்கிறது.

இந்த இளமை வாய்ப்புக்களை வைத்து எழுதி எழுதியே காலத்தை ஓட்டும் எழுத்தாளர்களை எல்லாம் ஒரு காலத்தில் இந்தச் சமூகம் வீதியிலே நிற்கவைத்து விமர்சிக்கத்தான் போகின்றது. அப்போது தெரியும் உண்மையான மக்கள் இலக்கியம் பற்றி.

நமது சஞ்சிகைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஒரு கருத்து மன்றத்தில் இப்படித் தன்கருத்தினை வைத்தவன் இந்தச் சங்கரன் தான். மேற்படி கருத்தினைக் கேட்டபோது இவன் வெறும் பிரமச்சாரியத்தின் பிதாவாகத்தான் எனக்குத்தெரிந்தான். இப்படி கூத்தன் முதல் முதலில் சங்கரனைப் பற்றிய அறிமுகத்தின்போது சங்கரப்பிள்ளையிடம் கூறிய வார்த்தைகளும்...

அதற்கு... ஒருவேளை இவன் அந்த வலைக்குள் வீழ்ந்து ஏமாற்றப்பட்டு ஏதும் விரக்தியால் இப்படி மாறியும் இருக்கலாமோ?

அப்படியென்றால் பெண்களைப் பழிதீர்க்கும் மனோபாவமாவது இருக்குமே, அப்படிக்கூட இல்லையே

தன்னைப்பற்றிய தாழ்வுச்சிக்கலாகவும் இருக்கலாமோ...

தாழ்வுச்சிக்கலிருந்தாலும் தவிப்பு, தாபம் என்று ஏதாவது இருக்கவேண்டுமே. இவன் இந்தப் பெண்கள் விடயத்தில் எனக்கு இராமகிருஷ்ணரைத்தான் நினைவுபடுத்துகின்றான். அவ்வளவு பரமசாது. அதனால்த்தான் நான் பூரணமாக இவனை மதிக்க நேர்ந்துவிட்டது.

கூத்தன் முதல் முதலாகச் சங்கரனைப் பற்றிக் கூறியபோது தனது கேள்விகளையும் மிஞ்சி அவர் அவனைப்பற்றி உரைத்தவை யாவும் ஒரு கணம் சங்கரனோடு சேர்ந்து வந்திருப்பதான உணர்வு. சங்கரப்பிள்ளை கூத்தரின் கூற்றுக்களை மனதிற்குள் நெட்டுருப்பண்ணிக் கொண்டிருந்தார். சங்கரன் ஒரு சாதாரண மனிதனாக அவருக்குத் தெரியவே இல்லை.

சரியாக இரண்டுமணிக்கெல்லாம் சங்கரன் பரிசளிப்புவிழாவுக்கான டவர் மண்டபத்தை வந்தடைந்தான். மண்டப வாயில் மகர தோரணங்களாட மிகப் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்துச் சினிமாத் தியேட்டரின் முன்னே பெரிசாகத் தீட்டி வைக்கப்படும் சினிமாக்கட்டவுட் விளம்பரம் போல இரு மந்திரிமாரின் உருவப்படங்கள் இருபுறமும் வைக்கப்பட்டிருந்தன. மணிமாலைகள் வேறு கட்டி வாழைக்குலைகள் சகிதம் பலமான அலங்காரங்கள். பார்த்த மாத்திரத்தில் சங்கரனின் மனம் அளவுகடந்த ஆனந்த வெள்ளத்துள் மூழ்கிச் சிறகடித்தது. எழுத்தாளர் பரிசளிப்பு விழாவிற்கு இத்தனை ஏற்பாடுகளா? எழுத்தாளர்களை வரவேற்கத்தானா மேளதாளங்கள் வாயிலில் காத்துக் கிடக்கின்றன. ஏதோ புதினம் பார்க்கும் பாவனைச் சிறுவனாக சங்கரன் ஒவ்வொன்றையும் கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருக்கிறான். மண்டப வாயிலில் வரவேற்புக்குழு ஒன்றுகூடி நின்றுகொண்டது. யாரோ இருவர் அங்குமிங்குமாக ஓடித்திரிந்து பெரியவராக எல்லோர் கண்களிலும் தரிசனம் கொடுத்துக்கொண்டே இருந்தனர்.

யாருக்கும் சங்கரன் யாரென்பது தெரியவில்லை. தெரிந்தாலும் பரவாயில்லை என்ற ஒரு நிலையில் யாரையோ எதிர் பார்த்து எல்லோரது விழிகளும் தவங்கிடந்தன. சங்கரன் மண்டபத்துள் சென்று அமர்ந்துகொண்டான்.

சிறுசலசலப்பு. வந்திட்டார்கள்... ம்... நாதஸ்வரம் எங்கே... கேள்விகள் .. அங்கலாய்ப்புகள்... ஆரவாரங்கள்.

மங்கள இசையோடு அமைச்சர்கள் அழைத்து வரப்பட்டனர். விழா ஆரம்பமானது. எப்போது பரிசுகிடைக்குமென்ற எண்ணம் சங்கரனின் ஆவலை அதிகரித்துக்கொண்டேயிருந்தது. எப்படியும் எழுத்தாளரின் இன்னலை அமைச்சர்கள் முன் இரண்டு நிமிடமாவது எடுத்துப் பேசவேண்டும் என்ற முஸ்தீபு எண்ணத்தோடு கிடைக்கப்போகும் பரிசையே குறியாகக் காத்திருந்தான் சங்கரன்.

பரிசுத்தொகையை அப்படியே சரத்திற்கு அன்பளிப்பாகக் கூத்தரிடம் கொடுத்துவிட வேண்டும். சங்கரனின் மனதில் அந்த நினைவுகளைத் தவிர வேறெதுவுமே எழுந்திருக்கவில்லை.

பரிசுநாவல்களைத் தவிர வேறுசில நாவல்களும் நூல்களும் வெளியீடு செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டது. வண்ணத்துப்பூச்சிகள் போல சிலபெண்கள் அந்த நூல்களை மண்டபத்துள் இருந்தவர்களிடம் விற்றுக்கொண்டிருந்தனர்.

மந்திரிகள் இருவரும் பேசி முடித்தபோது விழாத்தலைவர் பரிசு பெறுவோரின் விபரங்களை வாசித்தார். முதற்பரிசு ஆயிரம் ரூபாய்தானே. அது செங்கீரனிற்குத்தானே.. ஆயிரம் ரூபாவைத் தட்டிக்கொண்ட சக எழுத்தாளனைத் தரிசிக்கும் ஆவலோடு சங்கரன் இமைக்காதிருந்தான்.

செங்கீரன் அழைக்கப்பட்டபோது பலத்த கரகோஷம். அந்தக் கரகோஷமே சங்கரனின் மனதைக் குளிப்பாட்டியது.

மந்திரி ஒருவர் பரிசுப்பத்திரத்தை வழங்கினுர். குறிப்பிட்ட பணத்தொகை கிடைக்காதா என்ற ஏமாற்றம் கலந்த பார்வையாகச் செங்கீரனின் பார்வை விழாத்தலைவர்மீது வட்டமிட்டது- போட்டியை நடாத்திய நிறுவனத்தின் லட்சினையும் பரிசுக்குரியவரின் பெயரும் நாவலீன் பெயரும் பொறிக்கப்பட்ட வெள்ளித்தட்டு ஒன்றை இரண்டாவது அமைச்சர் வழங்க செங்கீரன் ஏதோ சம்பிரதாயமாக நன்றியைச் சொல்லி விடைபெற்ருன்.

சங்கரனின் முகம் கருக்கொண்ட மேகமாகக் கறுத்து விட்டது. முதற்பரிசே இதுவென்ருல் இரண்டாம்பரிசு... ஓ...

அந்தச் சிந்தனையிலிருந்து விடுபடமுடியாது சங்கரன் தவித்துக்கொண்டிருந்தபோது சங்கரனின் பெயரும் அழைக்கப் பட்டது.

சோர்வு கால்களைத் தட்டிக்கொண்டதுதான் என்றாலும் காட்டிக்கொள்ளாது சென்றான் சங்கரன். வழங்கப்பட்ட பரிசுப் பத்திரத்தை மட்டும் பெற்றுக்கொண்டு சங்கரன் திரும்பினான். கமிராக்களின் மின்னல் முன்போலவே ஒரே நேரத்தில் பேரொளியாக மோதிச் சிதறின.

ஒருகணம் சங்கரனின் தலை சுற்றுவது போலத்தானிருந்தது. என்றாலும் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு வந்தான் விழாவிற்கான செலவுகள் மூவாயிரம் வருமோ? பக்கந்தேயிருந்த ஒருத்தர் இன்னொருவரிடம் கேட்பது சங்கரனின் காதிலும் விழுகிறது.

கொழும்பிலை இப்படி ஒரு விழா மூவாயிரத்துக்கை செய்யேலுமோ? எப்பிடியும் கூடப்பிடிச்சிருக்கும் என்று மற்றவர் சொல்லிக்கொண்டார்.

சங்கரன் அந்த இருவரையும் பார்த்துக்கொண்டு இப்படி வியாபாரம் செய்தால் மூவாயிரமென்ன ஐயாயிரமே வரும் தானே ஐயா... என்று தன் வெறுப்பைக் கொட்டித்தீர்த்துக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான்.

''அன்பர்களே எழுத்தாளர்களே நிதி குறிப்பிட்டளவு வசூலாகாத காரணத்தால் இம்முறை பத்திரங்களை மட்டும் வழங்கிப் பணப்பரிசுகளை நீக்கியுள்ளோம்.... இனி வருங் காலங்களில் இக்குறைபாடுகள் நிகழாது கவனித்துக்கொள்வோம்'' விழாத்தலைவன் அந்தக்குரல் நாராசமாகச் சங்கரனின் காதுகளில் பாய்ந்தது.

இலக்கியக் கோட்டைக்குள் வியாபாரிகளும் சுரண்டல்க்காரர்களும், சுயநலக் கும்பல்களும் இருக்கும்வரை எழுத்தாளன் பிச்சைப் பாத்திரம்தான். இந்தப் பிச்சைப் பாத்திரங்களை அட்சய பாத்திரங்களாக மாற்ற முடியாதா? என்ற கேள்வி சங்கரனின் நெஞ்சத்தே கனன்றெழுந்தது.

அந்த எழுச்சியின் வடிவமாகக் கூத்தரின் புன்னகை தவழும் முகம் சங்கரனின் கண்களில் ஒளி மின்னலாகத்தோன்றி மறைகிறது. ஓ.. என்ன பேதமைக்குள் வீழ்ந்து என்னை இழந்து கொண்டேனே. ''பரிசின் அளவினை வைத்துப் படைக்கப்படுவதல்ல இலக்கியம். காலத்தின் அளவுகோலாக மிளிர்வதே இலக்கியம'' என்று அடிக்கடி கூத்தர் சொல்லும் அந்த வார்த்தைகளைச் சீரணித்தவாறே அந்த மண்டபத்தினைவிட்டு வெளியேறினான் சங்கரன்.

மண்டப வாயிலைக் கடந்து அவன் வீதியில் கால்வைக்கும் போது கேட்டுத் தொடர்ந்த அந்தப் பிரளய ஓசையால் திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான் அங்கே... ஓ ஓடிவருபவர்கள் எல்லாம நம் தமிழர் தானா? ஒரேயொரு கணம் தான் இப்படியொரு கேள்வி எழுந்து அடங்குவதற்கு முன்னமே ஐயோ அம்மா என்ற அவலக்குரல்கள் பலவாகி அடங்கிய கேள்வியை உண்மைப்படுத்தியது. மீண்டுமொரு இனப்பூசலா? மனதிலிப்படி ஒரு கேள்வி எழுந்து கொள்ளவும் மீண்டும் அந்த மண்டபத்துள் நுழையவும் சரியாக இருந்தது. உயர்மட்டப் பிரமுகர்கள் கலந்து கொண்டிருப்பதால் அங்கே எதுவும் நடந்து விடாதென்று சங்கரன் நினைத்திருக்க வேண்டும். நினைவுகளெல்லாம் நிதானமாகவா நடந்து விடுகின்றன. நினைக்கக்கூடாததெல்லாம் அங்கே நடந்தது. யாருக்கு முன் எதுவும் நடக்காதென்று சங்கரன் எண்ணினானோ அவர்களுக்கு முன்தான் அந்தக் கோரக் கொலைகளும் பயங்கரச் சதைவெறியும் தலைவிரித்தாடியது. மண்டபத்தின் பின்பக்கமாகச் சங்கரன் பாய்ந்து விழுந்து மதிலால் தாவிக்குதித்து அடிபட்ட காலிலிருந்து இரத்தம் கசியக்கசிய உயிருக்காக அவன் ஓடினான். அவனென்ன யார்தான் என்ன செய்துவிட முடியும். வளர்த்த நாய் விசர் பத்திக் கடிக்கும்போது வளர்த்தவன் நின்று தான் என்ன செய்துவிட முடியும். வீறுகொண்ட ஒரு கூட்டம் சூழ்நிலையின் கைதிகள் போல் ஆகிவிட்ட அப்பாவித் தமிழர்களையெல்லாம் குத்திக் குதறிக் கொலை செய்து கொண்டிருந்தது.

சங்கரன் ஓடினுன். சங்கரனைப் போன்ற சகலருமே ஓடினுர்கள். ஓட்டத்தின் பிடியிலிருந்து தவறியவர்களும் அகப்பட்டவர்களும் செருக்களத்துச் சவங்களைப்போல் இரத்தவெள்ளத்துள் கிடந்தனர் பிணமாக.

மூன்று நாலு கிலோ மீற்றர் தூரத்தை ஒருசில நிமிடங்களில் எப்படித்தான் சங்கரன் ஓடி முடித்தானே. இனி அவனுல் ஓட முடியாதென்று ஆகிவிட்டது. சாவின் முனையிலிருந்து தப்பியோடி வந்துவிட்டாலும் தாமதித்தால் இனியும் அது நடக்கத்தானே போகிறது. சந்தியைக் கடக்கும்போது ஒரேயொரு முறை அந்தச் சந்தியின் நான்கு வழிகளையும நோட்டமிட்டான் சங்கரன். குண்டாந்தடிகளும் வேறுபல கொலைக்கருவிகள் சகிதம் அந்தக் கூட்டம் வந்து கொள்வதைச் சங்கரன் கண்டுகொண்டான் கணப்பொழுது கூடத் தாமதித்தால் எது நடக்கக் கூடாதென்று இத்தனை சிரமப்பட்டானே அது நடந்துவிடும்.

எதிரேயொரு பிரத்தியேகவீதி மிகவும் குறுகலாக இருப்பது சங்கரனின் கண்களில் பட்டுவிட்டது. அந்த வழிக்குள்ளால் தாண்டித் தாண்டித் தாவியோடி மூலைத்திருப்பத்திலிருந்த அந்த வீட்டிற்குள் மதிலேறிக் குதித்துப் புகுந்து கொண்டான் இனிமேல் ஓடமுடியாதென்ற ஒரு நிலையில் சங்கரன் அந்த வீட்டில் அபயம் கோரினுன். ''எங்களைக்காப்பாற்ற இங்கே மனிதர்கள் இல்லையா?'' என்ற வார்த்தைச் சிதறலோடு 'ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சங்கரன் தன்னைமறந்து கத்திக்கதறினுன்.

பலத்த குரலோடு பாய்ந்து வந்த அல்சேசியன் நாயைத் தொடர்ந்துவந்த அம்மனிதன் நாயை ஒருகையிலும் சங்கரனை மறுகையிலுமாகப் பிடித்துக்கொண்டான்.

பின்னுலிருந்த அந்தக் கக்கூசினுள் சங்கரன் தள்ளப்பட்டுவிட்டான். கக்கூசுக் கதவினை இழுத்துச்சாத்திய அந்த மனிதன் வெளியே வீதியை நோட்டமிட்டான். அந்தக் குச்சு வீதிக்குள்ளும் அப்பால் சந்தியின் திருப்பம்வரை யாரையுமே அவனுல் பார்க்க முடியவில்லை.

மயங்கிய மாலைப்பொழுது ஒருவித மயக்கத்தில் கிடந்தது. வெளி லைற்றுகள் எல்லாவற்றையும் அணைத்துவிட்டு அந்த மனிதன் கக்கூஸ்க் கதவைத் திறந்துகொண்டான்.

பௌர்ணமிநிலவு அழுது வடிந்து கொண்டிருந்தது. சங்கரன் மட்டும் அழமுடியாது சாவுக்கும் வாழ்வுக்கும் இடையேயான ஒரு போராட்டத்தில் மூழ்கியிருந்தான். நெஞ்சம் நிறைந்தபீதி மரணத்தின் பிரதிமைக்கோலங்களான வியர்வைத் துளிகள் நிறைந்த முகம். அரையில் மடித்துக் கட்டிய ஒரு இரவல் சாரத்தைத்தவிர வேறெதுவுமேயற்ற உடல் இப்படித்தான் அந்தப் பென்னம்பெரிய பட்டினத்தில் ஒரு வீட்டுக்கூரையில் மறைவான அந்தச் சின்னஞ் சிறிய இடத்தில் சுருண்டு கிடந்தான் சங்கரன்.

தண்ணீர்த் தாங்கியும் கூரையும் சந்திக்குமிடத்தில் வாய்க்கால் போன்றிருந்த அந்த ஓடைக்குள்தான் அவன் தனது நீண்ட உடலை வளைத்துச் சுருண்டு கிடந்தான். பகல் முழுவதும் சுட்டெரித்தவெயிலை குடித்துக் கிடந்த அந்தக் கூரைமீது கிடப்பதென்பதும் தீக்குளிப்பதென்பதும் ஒன்றுதான் என்பதை அநுபவித்துக் கொண்டுதான் சங்கரன் கிடந்தான். வெளியே என்ன நடக்கின்றதென்பதை எண்ணிப்

பார்க்கலாமே ஒழிய எட்டிப்பார்க்க முடியாதிருந்தது. அந்தளவிற்கு அந்தப் பஞ்சமா பாதகர் தம் கண்களின் பார்வை சென்ற இடமெல்லாம் ஒருவன் கிடைக்கானு என்ற வெறி மிகுந்த பார்வையோடுதான் சென்றுகொண்டிருந்தனர். எட்டிப்பார்க்க முடியாதபோதிலும் அந்தக் கூரைக்கும் மேலாகத் தூரத்தே புகைமண்டலம் மட்டும் முகிற்கூட்டம் போல மிதப்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழரின் கடைகள் வீடுகள் தொழிற்சாலைகள் என்று பேதமில்லாது எல்லாவற்றையும் தீ தன்வசப்படுத்திக்கொண்டு தன் கோர நாடகத்தை நடாத்துகின்றதாக்கும் என்று தன் மனதுள் எண்ணி வருந்தியவாறு அவன் படுத்துக்கொண்டான்.

தனக்குக் கிடைத்திருக்கும் அந்தக் குச்சு இடத்திற்குக்கூட சிலவேளை ஏதாவது இடையூறு ஏற்பட்டுக் கொண்டால்... அடுத்து தனக்கு நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை சங்கரனுல் எண்ணிப்பார்க்காமல் இருந்துவிட முடியவில்லை. மரண வேதனை என்பது மரணத்தறுவாயில் ஏற்படும் ஒரு இறுதி நிகழ்ச்சிதான். என்றாலும் மரணத்தை எண்ணிச் சதா கலங்கிக்கொண்டு அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஜீவாதாரப் போராட்டத்தினை அனுபவிப்பதென்பதும் அவ்வளவு இலேசான காரியமல்ல என்பது இப்போதுதான் சங்கரனுக்குப் புரிந்தது. ''சாவதென்பது மிகச் சுலபம். ஆனுல் சாகாமல் சதா செத்துக்கொண்டிருப்பது என்பது அவ்வளவு சுலபமானதொன்றல்ல'' என்று அவனது வாய் அவனையறியாமலேயே முணுமுணுத்துக்கொண்டது.

தனது வாழ்நாளில் இப்படியான படுமோசமான நாட்களைக் கண்டதில்லையே என்ற மனக்குமைச்சலும் அடுத்து என்னதான் நடந்துவிடுமோ என்ற பேரச்சமும் சங்கரனைச் சித்திரவதை செய்துகொண்டே இருந்தது இப்படிச் சித்திரவதைப் படுவதிலும் பார்க்கச் செத்துத் தொலைந்துவிட்டால் .. மனித நேயமேயற்ற இந்தக் காட்டுமிராண்டிகளின் கையால் சாவை ஏற்பதிலும் இங்கிருந்தே குதித்து செத்தொழிந்தாலென்ன என்றுகூட அவன் மனம் சிந்தித்தது. இத்தனை

நூற்றுக்கணக்கில் சாகடிக்கப்படும்போது நான்மட்டும் தப்பிக்கொள்ள எண்ணுவது வெறுங்கோழைத்தனமாகி விடாதா? என்றெண்ணிக்கொள்ளும் அதேவேளை கோழைத்தனமென்பதற்கும் இதற்கும் ஒரு தொடர்புமே இல்லை. என்றும் ஒரு நினைவு தோன்றும். இருந்தபோதும் இப்படித் துயரப்படுவதிலும் சாவை அழைத்துக்கொள்ளலாமே என்று அவன் எண்ணும்போது கூத்தரின் நினைவுவேறு எழுந்து அவனைத் தடுத்துவிடும். இப்படியே இருப்புக்கொள்ளாத மனத்தோடு தான் சங்கரன் போராடிக்கொண்டிருந்தான்.

பௌர்ணமி தினம் என்பது பௌத்தர்களுக்கென்ன இந்துக்களுக்கென்ன ஒரு புனிதமான நாள். ஆனால் கொழும்பில் என்ன நடக்கிறது. பௌர்ணமியன்றே மனிதப் பலியெடுப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் ஆங்காங்கே கிடைத்த அளவைப் பொறுத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழனென்று பிறந்துவிட்ட குற்றத்திற்காகவோ என்னவோ கொழும்பிலிருந்த தமிழர்கள் கண்டபடி அந்தந்த இடங்களிலேயே கொன்றொழிக்கப்பட்டனர். கண்டதுண்டமாக வெட்டுவதும் வீதியோரத்தில் கொழுத்தி வைப்பதும்... கொள்ளையடிப்பதும் கற்பழிப்பதுமாக இப்படித்தான் அந்த ஆவணி இருபத்திமூன்றில் பல நல்ல நாடகங்களை அந்த காடையர்கள் இனவெறி மேடையில் அரங்கேற்றிக்கொண்டிருந்தனர். இந்த நல்ல மனிதரின் கண்களிலும் கைகளிலும் அகப்படாது தப்பி ஓடிக்கொண்டவர்களில் சங்கரனும் ஒருவன்.

அந்தக் கூரை மறைவிடத்திற்கு வந்து மூச்சு விடும்வரை சங்கரன் எத்தனை கிலோமீற்றர் தூரத்தை மூச்சிரைக்க ஓடியிருப்பான் என்பது அவனுக்கே தெரியாது.

ஐயோ... ஐயோ... என்னைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கதறிய கதறல் ஓசையோடுதான் பல மனித உருவங்கள் ஓடிக்கொண்டிருந்தன. சங்கரன் ஏதோ கால் போன போக்கில் ஓடிப் பூட்டிக்கிடந்த அந்த வீட்டின் மதி

லைத் தாவிக்குதித்துச் சென்று அந்த வீட்டிற் தஞ்சமடைந் திருந்தான். கண்ணீரும் வியர்வையும் போட்டியிட அவன் நாத்தழுதழுத்தபடியே அபயங்கோரி நின்ருன்.

வீதியை நோட்டமிட்டவாறே அந்த வீட்டுக்காரன் பெரேரா சங்கரனைக் கக்கூசுக்குள் தான் முதலில் விட்டுத் தாழிட் டார். நாற்சந்தியின் ஒருபுறமாகச் சென்ற ஓர் ஒடையின் முடிவில் அந்தவீடு அமைந்திருந்ததாலோ என்னவோ துரத்திவந்த இனவாத வெறிநாய்கள் ஒரு கூட்டத்தை விரட்டியவாறு மறுபக்கமாகத் திரும்பி மறைந்து கொண்ட போதுதான் அந்த வீட்டுக்காரன் சங்கரனிடம் வந்துசேர்ந் தான்.

கக்கூஸ் கதவினைத் திறந்து உடுப்புக்களைக் களைந்துவிட்டுத் தன்னேடு வரும்படி சங்கரனை அழைத்துக்கொண்டு பின்னே சென்றுகொண்டான். பெரேராவின் சாரம் ஒன்று சங்கரனின் உடலைத் தழுவிக்கொண்டது. இதுவரையும் சங்கரனேடு பேச்சுக் கொடுக்காத அந்த மனித உருவம் அரைகுறைத் தமிழில் அப்போது பேசியது. சங்கரனுக்கு ஒருகணம் ஓநாய்க் குப் பயந்து சிங்கக்கூட்டில் விழுந்துவிட்ட ஒருபீதி அப்ப டியே அவனைச் செயலிழக்கச் செய்துவிட்டது.

என்னதம்பி நானும் சிங்களவனென்று பயப்பட வேண் டாம் உன்னைக் கடைசிவரைக்கும் நான் காப்பாத்துறன். பயப்பிடாமல் கூரையில் ஏறிப்படு என்றபோதுதான் ஏதோ ஒருவித தைரியம். அந்த மனிதன் காட்டிய கித்துள் மரத் தைக் கட்டிப்பிடித்துச் சறுக்கிச் சறுக்கி அது நெஞ்சை உரஞ் சிப்பிய்க்க ஒருவாறு கூரைமீது கால்வைத்துக்கொண்டான். யாழ்ப்பாணத்தில் மரமேறத் தெரியாதென்றிருந்த எனக்கு என்னமாதிரி இந்தக்கலை கைவந்ததோ. அங்கு மரமேறி ஞல் அது தாழ்ந்தசாதித் தொழில். ஆனல் இங்கேயெனக்கு உயிர்காக்கும் தொழிலாக உதவியிருக்கிறது. செய்தொழில் தெய்வமென்பது உண்மையென்ருல் மரமேறுவதும் ஒரு தெய்வீகத் தொழில்தானே? உயிரைக் கையிலை பிடித்துக்

கொண்டு வரும்போது மரமேறுவது இழிவென்றிருந்தால் உயிரைக் காத்துக்கொள்ள முடியுமா? அவன் சிந்தனை பல உண்மைகளை இந்த வேளையிலாவது ஒத்துக்கொண்டது.

கூரைமீது அந்த மறைவான இடம் இப்படி அமைந்திருந்ததே இதற்குத்தானு? தண்ணீர்த்தொட்டிக்கும் கூரைக்கும் இடையே இருந்த அந்த ஓடைக்குள் அவன் நீட்டி நிமிர்ந்து கிடக்க முடியாதபோதும் சுருண்டு கிடந்தான்.

இவனும் ஒரு சிங்களவன் தானே. இவனுக்கு மட்டும் இந்தத் துவேசம் எப்பிடி இல்லாமல் போயிருக்கும் என்பதை நினைத்தபோது சங்கரனுக்கு ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் பட்டது.

மனிதர்களென்ருல் எல்லோரும் மனிதர்களா என்ன? மனிதனையும் மனிதாபிமானத்தையும் மதிக்கத் தெரிந்தவன்தானே மனிதன். அந்தவகையில் இந்த மனிதன் உண்மையான ஒரு மனிதன்தான் போலும். இவர் ஏன் என்னைக் கூரையில் ஏறிப்படுக்கச்சொன்ஞர் என்ற கேள்வி அவனுக்கு முதலில் அச்சரியமாக இருந்தாலும் சற்று ஆழமான யோசனையின் பின்புதான் அந்த ரகசியம் அவனுக்குப் புரிந்தது. சிங்களக்காடையர்கள் ஒருவேளை இந்த வீட்டிற்குள்ளும் புகுந்து பார்த்துவிட நேர்ந்தால் உள்ளேயிருந்து நான் இவர்கள் கையால் சாகவேண்டியநிலை ஏற்படாமல் தடுப்பதற்கு இதைவிட வேறு மார்க்கமில்லாது போனதால்தான் இப்படிக் கூரைமீது படுத்திருக்க வைத்தார் போலும் என்று அவன் விளங்கிக்கொண்ட போதுதான் பெரேரா என்ற அந்தச் சிங்களவன் சங்கரனின் உள்ளத்தில் இமயமாகி நின்ருன். அந்த உயர்ந்த மனிதனை நினைத்ததாலோ என்னவோ சங்கரனின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் சிந்திச் சிதறின. இந்தக் காட்சிகளுக்கெல்லாம் சாட்சியென்பது போல ஊமை நிலவும் அழுது வடிந்து கொண்டிருந்தது. அதன் மௌனமொழியை யார்தான் புரிந்துகொள்வார்களோ யாருக்குத் தெரியும்.

இரவு வந்தது என் உயிர் காக்கும் கவசப் புகலிடமான அந்தக் கூரையை விட்டுக் கூரையோடு மருவிநின்ற அந்தக் கித்துள் மரத்தைச்சறுக்கிக் கீழிறங்கி அந்த வீட்டின் ஒரு மூலையில் ஒழிந்திருந்து சாப்பிடுவதும் மீண்டும் பொழுது விடிவதற்கிடையில் கித்துளாலேறிக் கூரையில் படுப்பதுவும் சிலநாள் வாடிக்கையான ஒரு வரலாற்றுப் பாடமாகச் சங்கரனுக்கமைந்து விட்டது. இப்படி எத்தனைபேர் இன்னமும் உயிருக்கான அந்தப் போராட்டத்தில் இப்படி வரலாறு படைத்துத் தப்பிக் கொண்டார்களோ யாருக்குத் தெரியும். நான்கு நாட்கள் ஏதோ நாலு வருடங்களாகிக் கனத்தது. அந்தக் கனமான நாட்களில்தான் சங்கரன் எல்லாமற்ற ஒரு நிலையில் தனிமைப்பட்டு விட்டான். தூக்கம் அசதி களைப்பென்ற எல்லாமே அவனை ஆட்கொள்ள மறுத்த போது ஏக்கம் ஒன்றே நெஞ்சில் குடிபுகுந்திருந்தது.

தன்னை மறந்து தன்னிலை மறந்து எல்லாமிழந்த ஒரு இனத்தின் பிரகிருதியாகச் சங்கரன் தன்னை நினைத்துப்பார்த்

தான். வாழ்க்கையின் மேடுபள்ளங்களில் சதா வீழ்ந்து வீழ்ந்து புரண்டெழுந்துவிட்ட போதிலும் இந்த வீழ்ச்சிதான் சங்கரனை வெகுவாகப் பாதித்துவிட்டது. இது ஒரு தனி மனிதப் போராட்டம் என்றால் அவனென்ன யாராலுமே தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் இது ஒரு இனத்தின் போராட்டமாகக் கருதி ஒரு இனம் தன்னிலும் சிறுபான்மையாக இருக்கும் ஒரு இனத்தை ஆதிக்க போதையால் இனவெறி கொண்டு அழிக்க நினைக்கும்போது எப்படித்தான் தாங்கிக்கொள்வது. சங்கரன் இப்படி நினைத்து நினைத்து நெஞ்சம் புண்ணாகிய போது அவன் விழிகளிலிருந்து கண்ணீர்த்துளிகள் பொலபொலத்து வீழ்ந்தன. அவனையறியாமலேயே இப்படிக் கண்ணீர் கரைபுரளும்போது சிந்தனை சினம் கொண்டு யாரையோ திட்டுவதுபோல் இருந்தது. ''அல்லற்பட்டாற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை''யென்று சொன்ன பொய்யில் புலவனின் கூற்றும் பொய்த்துவிட்டதே. கண்ணீருக்கு வள்ளுவன் சொன்னது போன்ற வலிமைஇருந்திருக்குமானால் நமது தலைமுறைக் கண்ணீருக்கு இன்னும் வலு கிடைக்கவில்லையா? ஆண்டாண்டு காலமாகத் தமிழர்கள் இந்த நாட்டில் அழுது வடிக்கின்ற கண்ணீர் வலுவற்ற வெற்றுநீர் தானா...? அதுவுமில்லையென்றால் பழமைவாதிகள் சொல்லும் கன்மவினையாக முற்பட்ட தமிழன் தன் இனத்திற்குள்ளேயே சாதியின் பேரால் இழைத்துச்சென்ற கொடுமைகளிற்கான கண்ணீர்தான் இதுவோ?

எந்த வழியில் எப்பிடி ஆற்றுப்படுத்துவது விதி கன்மம் என்பதை ஒப்புக்கொள்ள அவனது மனதில் இடமோ எழவில்லை. விதியும் கன்மமும் இதுதானென்றால் நமது வேதனை எப்படித்தீரும்..? நீண்டதொரு கேள்வியை எழுப்பிக்கொண்ட அவனது மனதில் சரியான மார்க்கத்தில் இன்னமும் நம் இனம் கால்பதிக்காத காரணந்தான் இந்நிலை. இந்த நிலைக்கு எப்படியோ ஒரு முடிவு வந்துதானே தீரவேண்டும் என்று சிந்தித்தவாறு இறங்கினான் சங்கரன்.

ஐந்து நாட்களாகக் கூரையேறிப் பகலைக் கழிப்பதும் இர வில் இறங்கிப் படுப்பதுமாக இருந்த சங்கரனுக்கு அந்த கூரையேறும் படலம் எப்படியோ முடிந்தது.

இன்றுமுதல் தமிழர்களெல்லாம் அகதிமுகாம்களில் தங்க வசதி செய்யப்பட்டிருக்கிறதாம். நாளைமுதல் கப்பலில் அகதி கள் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படுவார்களாம். இரவு இங்கே எங்களோடே படுத்துவிட்டு விடிந்ததும் ஏதாவது ஒரு முகாமுக்குப் போகலாம் என்று பெரேரா சொல்லிக் கொண்ட போதுதான் சங்கரனின் முகத்தில் சற்று வெளுப் புத் தெரிந்தது.

கூரைச்சிறையில் இருந்து விடுதலை கிடைத்துவிட்டாலும் அகதிமுகாமில் இன்னும் எத்தனை நாளாகிறதோ? என்ற யோசனையில் சங்கரன் ஆழ்ந்திருந்தான்.

தம்பி... சங்கரன் ஏன்... என்ன யோசனை நீர் அகதிமுகா மிற்குப் போக விரும்பாது விட்டால் இங்கு தங்கலாம். கட் டாயமாக உம்மை நான் அனுப்பிவிடமாட்டேன். தூக்கமின் றிக் கூரைமீது நீர் படுத்திருந்த ஒவ்வொரு நிமிசமும் வெட்கத்தால் தலைசாய்த்துத் தூங்காமல்தான் நானும் இருந் தேன்... நான் ஒரு சிங்களவனாகப் பிறந்து விட்டதற்காக மிகவும் வெட்கமும் வேதனையும் அடைந்தேன். ஆதிமனிதர் போலவும் ஆபிரிக்கக் காட்டில் வாழும் நாகரீகமற்ற காட்டு மிராண்டிகள் போலவும் எமது மக்கள் நடந்து கொள்ளும் போது... இவைகளைத் தடுக்க முடியாது தவித்துத் துடித்த துவும்... அதற்குமேல் அவரிடமிருந்து வார்த்தைகள் வெளி வரவில்லை. மடைதிறந்த வெள்ளம்போல கண்களிலிருந்து கண்ணீர் கால்வாயமைத்துப் பெருகியது.

சங்கரன் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாது தவித்துக்கொண் டிருந்தான். இங்கு என்னதான் பாதுகாப்பென்று இருந்தா லும் இது தங்கக்கூட்டில் அடைபட்டிருக்கும் கிளிபோல் தானே இருக்கவேண்டும். அகதிகள்முகாமை அடைந்துவிட்

டால் எப்படியாவது யாழ்ப்பாணம் சென்றுவிட வழிபிறக்கும் தானே என்ற தீர்மானம் உறுதியாகிவிட்டது.

ஐயா மானுடம் இன்னமும் செத்துவிடவில்லை என்பதை நீங்கள் நிரூபித்துவிட்டீர்கள். நீங்கள் செய்த உதவிக்கு நன்றி. நான் அகதிகள்முகாமுக்குப் போவதுதான் .. அவன் வார்த்தைகளை முடிப்பதற்கிடையிலேயே நானும் அகதிமுகாம் வரை கூட வந்துவிட்டு திரும்புகிறேன் எனச் சொல்லிவிட்டுப் புறப்படத் தயாரானுர் பெரேரா.

சங்கரன் நாலைந்து நாட்களாகக் கட்டிக்கொண்டிருந்த அந்தச் சாரத்தை மாற்றித் தனது காற்சட்டையையும் சேட்டையும் பெற்றுக்கொண்டான். முழங்காலிலிருந்து கசிந்த ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்த காற்சட்டையில் இரத்தக்கறை அப்படியே கிடந்தது, நடந்து முடிந்த ரத்தச் சுவடுகளுக்கெல்லாம் சாட்சி உரைப்பதற்காகத்தான் அந்தக் கறை இருக்கின்றதெனும்படி இருந்தது. சங்கரன் அந்தக் கறையைக் கழுவிக்கொள்ள விரும்பவேயில்லை.

சங்கரன் பெரேராவோடு பம்பலப்பிட்டியில் அகதிகள் தங்கியிருந்த அந்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்தபோது அவன் கண்கள் பனித்தன ''வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரம் கொள் கூட்டமன்னுர் உடலினுல் பலராய்த்தொன்றி உள்ளத்தால் ஒன்ருய்க் காண்பர்'' என்ற பாரதிதாசனின் கவிதையடிகளை உள்ளம் ஒருமுறை நெட்டுருப்பண்ணிப் பார்த்துக்கொண்டது. இந்த முகாம் மட்டுமா வெள்ளம்போல் இருக்கிறது.... இன்னும் எத்தனை எத்தனை இடங்களில் இந்த முகாம்கள்... சே .. இதுவும் இந்த நாட்டின் அபிவிருத்திகளில் ஒன்ரு. அகதிகள் அபிவிருத்தி செய்யும் நாட்டில்தானே இத்தனை சேனையாக அகதிமுகாம்களும் அகதிகளும் இருக்கமுடியும்... அதனுல் தான் இங்கே ஆண்டுக்காண்டு இந்நிலை தோன்றுகின்றதாக்கும்.

சங்கரன் பெரேராவை ஒருகணம் மறந்து அந்த அகதிகளின் நிலையிலே தன்னை ஒன்ருக்கிக் கொண்டபோது பெரேரா ஏதோ சங்கரனுக்குச் சொல்வது போல கேட்கவே சங்கரன் பெரேராவின் பக்கம் திரும்பித் தன் நன்றியைத் தெரிவித்து பெரேராவின் முகவரியையும் பெற்றுக்கொண்டு பெரேராவை அனுப்பிவைத்தான். நன்றியுணர்வு வார்த்தைகளிலும் பார்க்கக் கண்களில் இருந்துதான் அதிகம் வெளிவரும் என்பது போல் அவன் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வீழ்ந்து சிதறியது.

பெரேரா; ஒரு தமிழனைக் காப்பாற்றி முழுத்தமிழரின் நன்றிக்காளாகி உயர்ந்து நிற்கும்போது முழுத்தமிழர்களின் வெறுப்பையும் சம்பாதித்துள்ள ஏனைய நம்மவர்களை யாரால் மன்னிக்க முடியும்? என்ற மனவேதனையுடனேயே சென்ருர்.

அந்த முகாமிற்கு வந்ததுமுதல் சங்கரனின் மனம் பலவாறு சிந்தனைப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தது.

ஆடுமாடுகளை அடைத்து வைக்கும் பட்டி மாதிரித்தான் அந்த முகாம் காட்சியளித்தது. அத்தனை நெரிசலும் நெருக்கமுமாக அந்த மண்டபம் இருந்தது. பெரும்பாலான பலர் எதையெதையெல்லாமோ இழந்த நிலையில் தம் துன்பங்களை எண்ணியெண்ணி அவலக்குரலில் எப்படியெப்படி எல்லாமோ புசத்திக்கொண்டிருந்தனர். ஒருவரின் கவலைக்கு ஒருவர் ஆறுதல் வார்த்தை சொல்லக்கூடிய நிலையில் யாருமே அங்கு இல்லை. எல்லோரும் தத்தம் நிலையை எண்ணித் தாமே தம்மை ஆற்றிக்கொள்வதைத் தவிர வேறு மார்க்கமின்றி இருந்தனர். எங்கோ மூலையில் மண்டபத்திற்கு வெளியே நின்றிருந்த அந்த மரத்தின் கீழே இரண்டு மூன்று கிடாரங்களை அடுப்பேற்றி அகதிகளுக்கான சமையல் ஆரம்பமாகிவிட்டதுகண்டு சங்கரன் சிரித்தான். அந்தச் சிரிப்பின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் சங்கரனுக்கு ஏதோ ஆகிவிட்டதென்று எண்ணிக்கொண்டு அவனைப்பார்த்துச் சிரித்தனர்.

பசியோடு மனிதன் இருந்து விடலாம். ஆனால் அரைகுறைப் பசியைத் தீர்த்து மீதியை விட்டுவிடும்போது மனிதனுக்கு ஏற்படும் ஒருவித அந்தகாரம் இருக்கிறதே அந்த நிலையை எத்தனையோமுறை சங்கரன் அனுபவித்திருக்கிறான். அந்த அநுபவத்தை மனதிற் கொண்டுதான் அவன் சிரித்தான் என்பதை அவர்களுக்குத் தெரியுமா என்ன?

சிலர் குழுநிலையில் அங்குமிங்குமாகக் கூடிநின்று எதை எதையோ எப்படியெப்படியோ எல்லாம் பேசிக்கொண்டிருந்தனர். தானும் ஏதோ ஒருகுழுவில் சேர்ந்து அவர்களின் கருத்துக்களையும் அறிந்துவிடச் சங்கரன் எண்ணினான். மண்டபத்தின் கிழக்குப் புறமாக வெளியேயிருந்த அந்தச் சிறிய ஓடையில் நின்றிருந்த குழுவில் பல முதியவர்களின் முகங்கள் தெரிந்து கொண்டதாலோ என்னவோ சங்கரன் அந்தக் குரலோடு சேர்ந்து கொண்டான்.

நான் எனது பதவிக்காலத்துள் மூன்றாவது தடவையாக இந்த அக்கிரமத்தைச் சந்தித்து விட்டேன். எல்லாக்காலத்திலும் பார்க்க இம்முறை மிகமிக மோசமாக இருந்தது. இது பெரிய மட்டத்தில் சிலர் குறிப்பிட்ட இடங்களை வெகு திறமையாகத் திட்டமிட்டு அதன்படி நடத்தி முடித்திருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் ஏதோ ஒரு பின்னணி இருப்பது போலவும் திட்டமிட்டுச் செய்தது போலவுமே எல்லாம் நடந்திருக்கிறது. வேலி பயிரை மேய்வதுபோல பெரிய மட்டத்தவர்களின் அனுசரணையில்தான் இத்தனை அனர்த்தங்களும் கச்சிதமாக நடந்து முடிந்தது என்று ஒரு பென்சன் எடுக்கப்போகும் வயதினர் கூறினர். அவர் கூற்றைப் பலகுரல்கள் ஆமோதித்தன.

எனக்கு நன்றாகத் தெரிந்த ஒரு அரசியல் பிரமுகர் (சொல்லும் போதே அங்குமிங்கும் பார்த்துக் கொ ண் டு தா ன்...) வெறும் சாரத்தோடு கொள்ளைக் கூட்டத்தோடு வந்ததைப் பார்த்தேன். அப்பொழுது நான் அந்த மரத்தில் இருந்திருக்காமல் இருந்திருந்தால்.. பிறகென்ன வேள்விதானே

செய்திருப்பார்கள். மரம் அரசாங்க அலுவலகம் ஒன்றின் முன் நின்றிருந்தபடியால் எனக்கு ஏதோ இப்படியொரு வாய்ப்பு... இப்படி இன்னொரு நடுத்தர வயதினர் உணர்ச்சிபொங்க உரைத்துக்கொண்டார்.

''தேர்தல் காலத்திலும் பதவிகளைப் பெறும்போது சிலபெரிய மனிதர்கள் உலகத்திலுள்ள அதி உயர்ந்த சர்வகலாசாலைகளையும் கல்லூரிகளையும் இழுத்து அங்கே தாம் பெற்ற பட்டங்களையும் முன்நிறுத்தித் தமது தகைமைகளை நியாயப்படுத்தி நிற்பர். ஆனால் இப்படியான சின்னத்தனங்களின் போது அந்தச் சர்வகலாசாலைகளையும் கல்லூரிகளையும் பெற்றெடுத்த பட்டங்களையும் மறந்து, இந்த வேலைகளிலும் நாம் சளைத்தவர்களில்லை என்று காட்டிவிடுகின்றனர். பாவம் இவர்களால் அந்தர் சர்வகலாசாலைகளும் கல்லூரிகளும் பட்டங்களும்கூட நாணிக் குறுகி நிற்பதை இவர்கள் உணர்ந்து கொள்வதே இல்லை'' என்று விமர்சன நோக்கில் ஒருவன் கூறினன்.

இளைஞர்கள் சிலர் துடிதுடித்தவாறு பேசிக்கொண்டிருந்தனர் நேற்று ஒன்று, இன்றைக்கு இந்த முகாம் நாளைக்கு இன்னொரு முகாம் இப்படியே காலங்காலமாக அகதிகளாக வாழ்வதிலும்... அகதிமுகாம்கள் அத்தனையும் இராணுவ முகாமாக ஏன் மாறக்கூடாது. சத்தியம் தர்மம்... அன்பு கருணை என்று நாம் பேசிக்கொண்டே இருப்பதால்தான் மற்றவன் வெகு சுலபமாக நம்மைத் தம் இஷ்டப்படியெல்லாம் அடித்து நொருக்கிச் சித்திரவதைப் படுத்துகிருன். இந்த நிலைக்கு நிரந்தரத் தீர்வு பிறக்க் வேண்டுமானல் அடிக்கு அடி உதைக்கு உதை போரைப் போரால் வெல்ல முடியும் என்று உணர்ச்சி ததும்பப் பேசிக்கொண்டிருந்தான் ஒரு தாடிக்கார இளைஞன். அந்த இளைஞனின் கருத்தைப் பலர் ஏற்றுக் கொள்வதுபோலத் தலையைச் சாய்த்துக் கொண்டனர்.

அந்தத் தாடிக்கார இளைஞனின் கருத்துக்களைப் பலர் அனுமதித்திருந்த போதிலும் வெளிக்காட்டிக்கொள்ள ஏனோ

அவர்கள் தயங்குவதைச் சங்கரன் புரிந்து கொண்டான். வாழ்வில் ஒரேயொருமுறைதான் மனிதன் சாகப்போகின்ற வன். ஆனுல் அந்த ஒருமுறை சாவைச் சந்திப்பதற்கிடை யில் எத்தனை சாவுகளுக்கான போராட்டத்தில் நித்திய கண் டம் பூரண ஆயுளாக இருக்கமுடியும் என்று தன் கருத்தை யும் வைத்துவிட்டு எதையோ எதிர்பார்த்திருந்தது போலக் காவற்படையினரதும் இராணுவத்தினதும் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதையும் நாசூக்காகச் சொல்லி அந்தத் தாக்கத்தாலும் சிலர் எதையுமே பேச அஞ்சுகிருர்களென் றும் சங்கரன் சொன்ஞன்.

எங்களைக் காவல் செய்வதற்கு இத்தனை ஆயுத பலமிருந் தும் ஏன் இந்தளவிற்கு இராணுவத்தைக் குவித்திருக்கிருர் களோ? என்று இன்னேர் இளைஞன் சொல்லி முடிப்பதற்கி டையில் ''பலத்த பாதுகாப்பு அரணுடைய சிறைக்கூடமே பலிபீடமாக மாற்றப்பட்டு விட்டபின் இங்கு ஏன் அப்படி நடந்துவிட முடியாது என்ற அச்சமாக இருக்கலாம்'' என்று தாடிக்கார இளைஞன் சொல்லிமுடித்தான்.

சங்கரனின் எதிர்த்திசையிலிந்து ஒரு குரல்... ''அன்னமிட்ட கையாலே அள்ளி இட்டேன் வாய்க்கரிசி... ஐயோ என்ரை ராசா... என்ரை ராசா... கதிரையிலே கட்டி உந்தன் கைகாலை வெட்டினரோ... கண்ணற்ற பாவிகளைக் கண்ண கித்தாய் கேட்காளோ? ஆ... இப்படித்தான் அவலச் சுதி யில் ஒப்பாரியாக வெளிப்பட்டுக்கொண்டிருந்தது.

கைகளை இருவர் பற்றிக்கொண்டு நிற்க அந்தத்தாய் எல் லோர் மனதையும் கசியவைத்து ஒப்புச்சொல்லி அழுதுகொண் டிருந்தாள். இரண்டு கைகளையும் இரண்டு இளம்பெண்கள் பற்றிக்கொள்ள ''அம்மாஅம்மா... எப்பன் சும்மா இருங்கோ... சும்மா இருங்கோ... வாலிபன் ஒருவன் இப்படிச் சொல்வ தும் கண்களைக் கசக்குவதுமாக நின்ருன்.

அந்த நெஞ்சைப் பிழியும் காட்சியைக் கண்டுகொள்ள முடி யாமல் சங்கரன் அப்பால் சற்று விலகிச் சனநெரிசலுக்

கூடாக மண்டபத்திற்கு வெளியே சென்றுவிட முயன்று கொண்டபோது யாரோ ஒருவன் அந்த மனுசிக்குத் தட்டிப் போட்டுதண்ணே... பாவம் என்று சொல்வது தெளிவாகக் கேட்டது.

சங்கரன் திரும்பி அவனே ஒருவித வெறுப்போடு பார்த்துக் கொண்டு அப்பால் நின்ருன். அந்தத் தாடிக்கார இளைஞன் ஒப்பாரிவைத்த அந்தப் பெண்ணைப்பற்றிச் சொல்லிக்கொண் டிருந்தான்.

உதவித் திட்டமிடல் உத்தியோகத்தராக இருந்த பொன்னம் பலத்தின் மனைவி இது. அந்த மனுசன் இருபது வருசமாக் கொழும்பிலேதான் இருந்தது. கந்தோருக்குள்ளை கதிரை யோடு கட்டிப்போட்டு... மனுசி சொன்னமாதிரி... அங்கம் அங்கமாக வெட்டி... துலேச்சுப்போட்டாங்கள் இந்த நர மாமிச வேடுவர். பக்கத்தை நிக்கிறது மூண்டும் அவற்றை பிள்ளையள்தான். இந்தப் பெடியன் அவரோட நிண்ட ஒரு சிங்களப் பியோனுல் எப்படியோ காப்பாற்றப்பட்டு விட்டா னும். பெடியன் கண்டதை அப்படியே தாய்க்குச் சொல்லிப் போட்டான். மேலே எதுவுமே சொல்லமுடியாது அந்தத் தாடிக்கார இளைஞன் முகத்தைத் துடைத்துக்கொண்டான். அவன் மட்டுமல்ல எல்லோரது விழிகளும் ஒப்பாரிக்கா கவும் தங்களுக்காகவும் அழுதுகொண்டிருந்தன.

ஏதோ மதியபோசனம் என்று ஒன்றை, மூன்று மணியாகி இருக்கும் அப்போது கிள்ளித் தெளிப்பதைக் கண்டு சங்கர னும் அதில் ஒருபங்கை எடுத்துக்கொண்டான். கூழோ கஞ் சியோ புக்கையோ... எதுவென்று சொல்லமுடியாத ஒரு புது வித பதார்த்தம் அது. கலப்படமான அரசியல்வாதிகளைப் போல அந்த உணவு எதற்குள்ளும் அடங்காது ஒரு புதிய பாணியில் அமைந்திருந்தது.

என்ன செய்வது. தொட்டில் மாடுகளுக்குத் தொட்டிலுக்கு எது வருகிறதோ அதுதானே சாப்பாடு. அதை விட்டு விட்

டால் வேறு ஏதாவது கிடைத்துவிடுமா? என்ன! உண்டவர் பாதி உண்ணுதவர் பாதி. இப்படிப் பலவிதமாக அந்த முகாமுக்குள் மூன்றுநாள் கிடந்தான் சங்கரன்.
இராணுவ டிராக்குகளில் ஏற்றப்பட்டுக் கப்பலில் ஏற்றப் படும்வரை இந்தக் கன்ருவிக் காட்சிகளேக் காண்பதைத் தவிர வேறுவழி..?

சங்கரனும் எப்படியோ மூன்ருவது நாள் கப்பலில் ஏறிக் கொண்டான். கப்பலுக்குள் மூச்சுத்திணறி இறந்தவரும் உண்டு. மூர்ச்சையானவர்... பிரசவித்தவர்... இப்படிப்பல வகையினரையும் சங்கரன் கண்டுகொண்டான். ஒரு காலத் தில் தென்னுபிரிக்க மண்ணிலிருந்து ஆங்கிலேயர்களால் அடிமையாக்கப்பட்டு விலேபோன அடிமைகளே, அன்று இப் படித்தான் கொண்டு சென்றதாக எங்கோ படித்த ஒரு ஞாப கம் சங்கரனுக்கு. எல்லோரும் ஏறியது முதல் இறங்குவது வரை நின்ற நிலேதான். ஏதோ சரக்குகளே ஏற்றிப் பறிப் பது போல மனிதச் சரக்குகளே வாரிக்கொட்டி நிரப்பிய அந்தக் கப்பல் கண்ணீரை நிறைத்துக் கடல்நீரில் மிதந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

அதிகாலேயில் இருந்து இந்தக் கடல்தாண்டு படலத்தின் முஸ்தீபுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

கப்பலில் ஏற்றப்பட்ட தமிழர்கள் ஏற்பட்டுவிட்ட கஸ்டங்க ளிலிருந்து விடுபட்டுக்கொண்ட பாவனேயில் சிலரும், காலங் காலமாகத் தொடரும் இந்த நிலேமைகளில் இருந்து நமது இனம் ஒரு விடிவைக்காண முடியாதா? என ஒருசிலரும் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அந்த வேளேயிலும் வீடு போய்ச் சேர்ந்துவிட்டால் போதும், பிறகு நிலேமைகள் சரி வந்ததும் இவங்களாலே ஏற்பட்ட இழப்புகளே எல்லாம் இவங்களிட்டையே கறந்தெடுக்க வேண்டுமென்ற சிந்தனே யில் சில முதலாளிகளும் இருந்தனர்.

எங்கடை பெரிய தலைவர்களெல்லாம் இருந்து என்னத்தைக் கண்டம். உத்தியோகம் எடுத்துக் குடுக்கவும் மாற்றமெடுக்கவும் தானே இவர்கள் தங்கடை காலத்தைச் செலவழிச்சினம். இந்திய சுதந்திரப் போராட்டத்திலை இணைந்துநின்ற ஜின்னா தனது இன மக்களுக்குத் தனியான ஒருநாடு வேணுமெண்டு கேட்டுப் பாகிஸ்தானைப் பிரித்துப் பெற்றபிற்பாடு கூட இந்த முரட்டுச் சாதியோடை ஒத்து வாழலாமெண்டு தானே இருந்தவை. அந்தக்காலத்திலை பாகிஸ்தானைப் பிரிச்சமாதிரி எங்கடை தாயகத்தையும் பிரிச்சுக்கொண்டிருந்தால்... யாரோ ஒரு அரசியல்வாதி தன்னோடு இருந்தவருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

உந்தச் சுடலை ஞானமெல்லாம் கப்பலாலை இறங்கினவுடனை மறந்து போடுவியள். சும்மா உந்தக்கதையை விட்டிட்டு இருமப்பா... என்று மற்றவர் சொல்ல சூழ நின்றிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் சுரண்டிச் சிரித்துக்கொண்டனர்.

பெண்கள் இருந்த பக்கத்தில் இருந்து ஒரே இரைச்சலும் அழுகுரலுமாக எழுந்துகொண்டிருந்தது.

சங்கரன் எல்லாவற்றையும் நோட்டமிட்டவாறு தன்மௌனத்தைக் கலைத்துவிடாதிருப்பதிலேயே உறுதியாயிருந்தான்.

''இதுகளெல்லாம் வெள்ளையன் இஞ்சை வந்ததாலை வந்த் வினைதான். சமயத்திலை சேருங்கோ உத்தியோகம் தருவம் பள்ளிக்கூடம் கட்டித்தருவம் என்று காட்டிச் செய்த சலுகையிலை மயங்கிப்போன எங்கடை சனங்கள் சலுகை வாழ்க்கையிலை ஊறிப்போச்சுதுகள். சலுகையிலை ஊறிப்போனதுகளுக்கு உரிமை பற்றிய சிந்தனைகள், இனப்பற்று, மொழிப்பற்று எண்டு ஒண்டுமே இல்லாமல் போச்சு. கொழும்பிலை கடை வைச்சால் ஒருவருசத்திலை பெரிய பணக்காறனாகிவிடலாம் எண்டு எல்லாரும் இஞ்சைவந்து கடையள் வைச்சினம். காசைக் கண்டினம். தானும் தன்ரை குடும்பமுமெண்டும் வாழ்ந்து கெட்டு இப்ப வாழ்வதற்குப் போராடவேண்

டியநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறம்'' என்று சும்மா இருக்க முடியாது மனம் குமுறிக்கொண்டிருந்த அந்த அரசியல்வாதி புறுபுறுத்தார். வீரக்தியின் வடிவங்களாக வார்த்தைகள் வெடித்தன.

இந்தக் கரகரத்த மனிதனின் பேச்சுக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும் என்ற முடிவோடு இளைஞன் ஒருவன் சொன்னான் ஐயா உங்கட மனக்கொதிப்பைப் புரிந்து கொள்கின்றோம். பழசுகள் விட்ட பிழையிலை உங்களுக்கும் பங்குண்டு தானே என்றான்.

ஓம் தம்பி பங்குண்டு எண்டுபோட்டுப் பேசாமல் இருக்கிறது தான் சரியெண்டு நினைக்கிறீரோ? என்று அந்த இளைஞனின் கேள்விக்குப் பதில்க்கேள்வி போட்டார் அந்த முதியவர்.

நான் உங்களைப் பேசவேண்டாமெண்டு சொல்லயில்லை. சரியாகப் பேசவேணும். சரியானதைச் செய்யவேணும். சும்மா தனிமனித வாழ்க்கைப் போராட்டம் நடத்தினதாலைதானே மட்டக்களப்பான், மலைநாட்டான், வன்னியான், யாழ்ப்பாணத்தான் எண்டு சண்டை பிடிச்சவை. சமூகவாழ்க்கையிலை பற்றிருந்தால் இப்பிடிப் பித்தலாட்டம் போட்டுச் சங்கங்கள் வைச்சிருப்பினமே. நீங்கள் சத்தியாக்கிரகம் உண்ணாவிரதம் எண்டு இருந்து மற்றவனைச் சண்டியன்மாராக்கிப் போட்டு இப்ப நல்லா நோகேக்கைதான் நாங்களும் சண்டித்தனம் செய்யப்போறமெண்டு கொக்கரிக்கிறியள் என்ன. இளைஞன் சற்றுச் சூடேற்றிப் பேசினான்.

இப்பவும் சூடுபிடிக்காத சோணகிரிகளாக இருக்கிறவை மாதிரி எனக்கு இருக்கேலாமல் கிடந்ததாலைதானே நான் துடித்துக்கொள்கிறேன். அந்தத் துடிப்பை நீர் விளங்கிக் கொள்ளவில்லையே... அர்த்தமான ஒரு ஏக்கத்தைப் புலப்படுத்திக் கொண்ட பாவனையில் அந்த முதியவர் பேசிமுடித்துவிட்டு எதையோ யோசித்தவராக அமைதியுற்றார்.

முதியவரை தான் திணறடித்துவிட்டதான ஒரு பெருமிதத்தில் அந்த இளைஞன் சிரித்துக்கொண்டான்.

இந்த விதண்டாவாதங்களில் உருப்படியாக எதையுமே புரிந்துகொள்ள முடியாதபோது சங்கரன் உருப்படியான சிலவற்றையாவது சொன்னாலென்ன என்று சிந்தித்தபோது ''சொந்தச் சகோதரர்கள் துன்பத்தினால் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி - கிளியே செய்வதறியாரடி' என்ற பாரதியின் அடிகள் நெஞ்சத்திரையில் கோடிட்டு நிற்பதை உணர்ந்து தன் உணர்வைத் தானே அடக்கிக்கொண்டான். நீலக்கடலின் திரைக்கோடுகளுக்கு நடுவே நுரைக்கோடிட்டுச் சென்றுகொண்டிருக்கும் அந்தக் கப்பல் போகவேண்டிய தூரத்தை மெல்ல மெல்ல விழுங்கிக்கொண்டிருந்தது.

இன்பத்தின் சைகைகளைக்கண்டு புறப்பட்ட சங்கரன் துன்பத்தோணியிலே துடுப்பிழந்து துடித்தவனாய் ஆக்கப்பட்ட நினைவுகளைச் சுமந்தவாறு நின்றிருந்த சங்கரனைத் தாயகத்திற்குச் சுமந்து சென்றுகொண்டிருந்தது அந்தக்கப்பல்.

பாக்குநீரிணையைத் தங்கத்தடாகமாக மாற்றிக்கொண்டு பகலவன் பவனி வரும்போது சங்கரன் கப்பலை விட்டுத் தரைக்குக் கொண்டுவரப்பட்டான். அகதிகளாக வந்த அத்தனை தமிழர்களையும் அழைத்துச் செல்ல வந்தவர்களின் தொகை கப்பலிலிருந்தவர்களிலும் அதிகமாகத்தானிருந்தது.

அந்த மக்கள் வெள்ளத்துள் சங்கரன் தன்பாட்டில் நடந்துகொண்டிருந்தான். உற்றார் உறவினர் நண்பர்கள் என்று எத்தனையோ முறைகளில் எல்லோரும் தத்தம் ஆட்களை எதிர்பார்த்துத் தவித்தக் கொண்டிருந்தனர். எல்லோரது தவிப்புகளும் பெருந்தவிப்பாக இருக்கும்போது சங்கரனுக்கு மட்டும் இருக்காதா?

வெண்மணற்றரையைக் கடந்து சங்கரன் பிரதான வீதிப் பக்கமாக வரும்போது... சங்கரா மிக நிதானமாக ஒரு

குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது. சங்கரனின் திரும்பிய் பார்வையில் கூத்தரின் உருவம் தெரிகிறது.

ஐயா..வார்த்தைகள்வெளிவர மறுத்துச்சரணடைந்துகொள்ள சங்கரன் ஓடிச்சென்று கூத்தரை கட்டிக்கொண்டான். சங்கரனின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் மலைஅருவி போல கட்டுப்படுத்த முடியாது பிரவகித்துக்கொண்டிருந்தது.

என்று தணியுமோ இந்த அகதிப்பிரவாகம்? என்ற கேள்வி சங்கரனின் நெஞ்சில் மட்டுமல்ல அங்கு நிறைந்திருந்த அத்தனை தமிழரின் நெஞ்சங்களிலும் நிறைந்துதான் இருந்தது.

ஈழத்து இலக்கிய களத்தில்

## மீராவின் வெளியீடுகளாக

**வெளிவந்தவை**

- மழைக்காலம்:- செங்கை ஆழியான் (20/-)
- ராதையின் நெஞ்சம்:- கே. எஸ். ஆன்ந்தன் (30/-)
- பூம்பனிமலர்கள்:- து வைத்திலிங்கம் (25/-)
- முடிவல்ல ஆரம்பம்:- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் (25/-)
- கானகத்தின் கானம்:- செம்பியன் செல்வன் (27/-)
- மண்ணின் தாகம்:- செங்கை ஆழியான் (25/-)
- பூஜைக்காக வாழும் பூவை:- கே. எஸ். ஆனந்தன் (25/-)
- இருள் இரவில் அல்ல:- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் (25/-)
- பாலைவனப் பயணிகள்:- கே. ஆர். டேவிட் (10/-)



❋ சங்கரன்:- வளவை வளவன்

## மீராவின் வெளியீடுகளை வாங்கி ஈழத்து வெளியீட்டுத்துறைக்கு கை கொடுங்கள்.



வளவை வளவன் -

ஈழத்தின் நவீன இலக்கியத் துறைக்குப் புதுப்புனல் வார்க்கும், இலக்கியவுலகின் புதியவார்ப்புகளில் குறிப்பிடத்தக்க ஒருவராகத் தம்மை இனங்காட்டியிருப்பவர் வளவைவளவன். (மா. செல்லத்தம்பி) ஆவார்.

1974 இல் வீரகேசரியில் வெளிவந்த சிறுகதைமூலம் ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகமானுர். அதன் பின்னர் ஏராளமான சிறுகதைகள், குறுங்கதைகள் என்பவற்ருேடு குறுநாவல்களையும் ஆக்கியுள்ளார். 'சங்கரன்' யாழ். இலக்கியவட்டம், 'மல்லிகை'யின் அனுசரணையோடு நடாத்திய இரசிகமணி கனக செ[illegible]ந்தன் நினைவுக் குறுநாவல் போட்டியில் பாராட்டுப் பெற்றது. நூலுருவில் வெளிவரும் முதலாவது நூல் இது. வளவை வளவன் மரபுக் கவிதைகளோடு, புதுக் கவிதைத்துறையிலும் ஈடுபாடுள்ளவர். தம்மைக் கவிதைத்துறையில் நிலை நிறுத்தி வருபவர்.

யாழ். இலக்கிய வட்டம் நடாத்திய சிறுவர் கவிதைப்போட்டியில் இவர் பரிசில் பெற்ருர். 'மதுர கவிதைகள்' தொகுப்பில் இவரது கவிதைகளிடம் பெற்றுள்ளன. ஈழத்தின் இலக்கிய செல்நெறித் தடத்தினைச் சரிவரப் புரிந்துகொண்டு, ஆக்க இலக்கியம் படைப்பவர். எல்லாவற்றிற்கும் மேலாகத் துயருறும் மக்களின் விடிவிற்கான இலக்கியம் படைக்கத்துடிப்பவர்.

ஈழத்துத் தமிழிலக்கியம் இவரால் பெருமைபெறுமென நம்புகின்றேன்.

செங்கை ஆழியான்